Koviloor Digital Library

திருநெல்லை

ஆன்மீகத் திங்களிதழ்

விசுவாவசு - ஆனி - 2025 - ஜூலை | இணைய வழி - மலர் - 2 - இதழ் - 11

அருள்மிகு
சங்கடா தேவி அம்மன்
காசி

Koviloor Digital Library

திருநெல்லை

இணைய வழி ஆன்மீகத் திங்களிதழ்

விசுவாவசு – ஆனி

2025– ஜூலை

இணையவழி மலர் 2 – இதழ் 11

(தனிச் சுற்றுக்கு மட்டும்)

சிறப்பாசிரியர்

பொற்கிழிக் கவிஞர்

சொ.சொ.மீ. சுந்தரம்

ஆலோசகர்

தமிழாகரர் தெ. முருகசாமி

ஆசிரியர் குழு

வெளியிடுபவர்

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் 630 307

மானகிரி (அஞ்சல்)

(வழி) காரைக்குடி

சிவகங்கை மாவட்டம்

04565–236846

94433 37011

இணைய அச்சாக்கம்

தீபா ராஜேஸ்வரி

கோவிலூர்

பொருளடக்கம்

பக்கம்

1. ஆசியுரை... 3
2. கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் அறிமுகம்... 12
3. சமய எழுச்சியால் சமூக மறுமலர்ச்சி காட்டிய அப்பர்..................................... 15
4. கற்குடிக் கோயில்................................. 25
5. திருவிளையாடற் புராணம் தொடர்.......... 29
6. தினசரி வாழ்க்கைக்குத் திருப்புகழ்......... 37
7. கோவிலூர் ஆதீன வெளியீடுகள் கோவிலூர் . புதையல்கள்.. 43
8. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம்........................ 46
9. சாபம் நீங்கி ஞானம் பெற்ற சத்தியதவன். 50
10. சிவாலயங்களின் சிறப்புகள்..................... 53
11. திவ்ய தேச கவிதை தரிசனம்.................. 57
12. பெரியபுராண கதை களம்....................... 64
13. தென்சபாநாயகர் கோவில் தரிசனம்........ 65
14. ஒலிப்பேழை.. 66
15. பயிற்சிப்பேழை...................................... 67
16. கோவிலூர் ஆண்டவர் நூலகம்............... 68
17. முந்தைய இதழ்கள்................................. 70

Koviloor Digital Library

ஆசியுரை

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதினகர்த்தர்

நமக்குக் காசி அருள்மிகு விசுவநாதரின் தொடர்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு உள்ளது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வழியில் நம்மை காசி விசுவநாதர் ஆட்கொள்கிறார். அவரின் அரும்பெரும் கருணையால் அளப்பரிய பணிகள் காசியில் நம்மை ஆட்கொள்ளுகின்றன. காசி வாழ்வும், காசி நினைவும், காசிப் புகழும் மேலும் மேலும் பெரு நன்மை அளித்து வருகின்றன.

காசிக் காட்சி

காசியின் சிறப்பினையும் காசி சிறப்பு பூசைகளையும் நேரில் கண்டு பரமானந்தம் பெறுவது வாழ்வின் முக்கியக் கடமைகளுள் ஒன்று. காசி செல்வதற்கு வாய்ப்பில்லாமல் நேரம் இல்லாமல் இருந்தால் காசிக் காட்சியைக் காண்பது அரிது. இத்தகையவர்களுக்குக் காசிக் காட்சியை நவீனத் தொழில் நுட்ப வசதி வழியாக கண்ணருகில் கொண்டு வந்து காட்டும் முயற்சியை நம் கோவிலூர் மடாலயம் செய்து வருகிறது. இப்பணிக்கு நீதியரசர் டத்தோஸ்ரீ டாக்டர் ராஜகோபுரம் மெ.சொக்கலிங்கம் அவர்கள் பெருந்துணை புரிந்து வருகிறார்கள். ஊர்தோறும் உள்ள மூத்த குடிமக்கள் காசிக் காட்சியை நேரில் காணும்பேற்றை இந்த நவீனக் கருவிகளால் காட்டமுடிகின்றது. இக்காட்சிக் கட்டணத்தை நீதியரசர் வழங்கி காசிக் காட்சி அறம் செய்து வருகிறார்கள்.

பல ஊர்களில் உள்ள முதியோர் இல்லங்களில் தற்போது

Koviloor Digital Library

சிவபெருமானுக்குச் சங்கடம் வந்த போது காசியில் உள்ள சங்கட மாதா கோயிலுக்குச் சென்று வழிபட்டு சங்கடம் போக்கினாராம். சிவபெருமானுக்கே சங்கடமா? என்று ஆச்சர்யம் எழலாம். தக்கன் வேள்வியால் ஏற்பட்ட சங்கடங்களைப் போக்க சங்கட மாதா கோயிலுக்குச் சிவபெருமான் சென்று வழிபட்டதாக காசியில் ஒரு ஐதீகம் நிலவுகிறது. அவருக்கே சங்கடம் நீங்கியது என்றால் அந்த சங்கட மாதாவைத் தரிசித்தால் நம் சங்கடங்களும் போகும் அல்லவா? ஆம் நீங்களும் தரிசிக்கலாம். இந்தத் திருநெல்லை இதழில் சங்கட மாதா அட்டைப் படத்தில் கருணை செய்கிறாள். மீண்டும் ஒருமுறை அட்டைப்படத்தில் உள்ள சங்கட மாதாவைக் கண்டு சங்கடம் தீர்த்துக்கொள்ளுங்கள்.

இந்தச் சங்கடமாதாவிற்குத் தீபம் காட்டும்போது பல்வகை ரூபங்களை அவள் எடுக்கிறாள். அதனை நம் கண்களால் காணமுடிகிறது. கூர்ந்து கவனித்தால் இதனை உணரலாம். கோபம், மகிழ்ச்சி, அருள், அன்பு என்று பல கோலங்களில் அவளின்

காசி விசுவநாதர் நேரடியாகச் சென்று தரிசனம் தருகிறார். இக்காட்சியைக் கண்டவர்கள் தொழுகிறார்கள், பணிகிறார்கள், மெய் சிலிர்க்கிறார்கள். அரிமளம்,நற்சாந்துபட்டி,பள்ளத்தூர் ,தேவகோட்டை, வெற்றியூர் போன்ற பல ஊர்களில் காசிக் காட்சியை நவீனக் காட்சிக் கருவிகள் வழியாக இம்மாதத்தில் ஏறக்குறைய 500 பேருக்கு மேலாக இக்காட்சியைக் கண்டுள்ளனர்.

இன்னமும் பெருக வேண்டும். காசிக் காட்சி அனைவரும் கண்டு மெய்ப்பொருள் உணரவேண்டும். இதனைத் தொடர்ந்து இன்னும் பல ஜோதிர் லிங்கங்கத் திருக்கோயில்களின் காட்சிகளும் இந்த காட்சி வடிவில் கொண்டு வந்து மக்கள் காண வைக்க காசி விசுவநாதர் நல்வழிகளைக் காட்டியுள்ளார்.

Koviloor Digital Library

மேலே காணும் நிகழ்வின் வீடியோ பதிவைக்காண இங்கே சொடுக்கவும்

கண்கள் காட்சி தருவதைக் கண்டு மகிழ இருகண்கள் போதாது.

காசி இராமேசுவரம் இணைப்பு புனிதத் தீர்த்தங்கள் வாயிலாக

அலகாபாத்தில் உள்ள திரிவேணி சங்கம தீர்த்தமும் இராமேசுவரத்தில் உள்ள மண்ணும் கோடித்தீர்த்தமும் முக்கியமான தீர்த்தங்கள் ஆகும். காசி மற்றும் இராமேசுவரம், ஆகிய இடங்களில் உள்ள எம்பெருமானுக்கு நாளும் அபிடேகம் செய்யும் பெருவேள்வி நடைபெற காசி விசுவநாதர் நம்மை இணைப்புப் பாலமாக ஆக்கியுள்ளார்.

காசி அருள்மிகு விசுவநாதர் திருக்கோயிலின் தலைமை செயல் அதிகாரி திருமிகு விஸ்வ பூஷன் மிஸ்ரா இராமேசுவரம் வந்து இராமநாத சுவாமியை தரிசனம் செய்து திரும்பும்போது AL AR கட்டளை பிரதிநிதி திரு.அருணாசலம் அவர்கள் கோடித்தீர்த்தம் செம்புகளில் அளித்தார்கள். அதை அவர்கள் காசிக்கு எடுத்துச் சென்று விசுவநாதருக்கு அபிடேகம் செய்தார்கள் அதன் அடிப்படையில் இரு ஜோதிர் லிங்கங்களையும் இணைக்கும் நிகழ்வாக இதைத் தொடர்ந்து நடத்தினால் என்ற எண்ணம் நமக்கு வந்தது. அதற்கு AL.AR கட்டளையும் ஒப்புக்கொண்டு, காசி விசுவநாதர் கோவிலுக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் அளித்தார்கள். அவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்து, இந்த மாதம் 27ம் தேதி திரிவேணி தீர்த்தம் காசியில் தகுந்த பூசைகளுடன் வரவேற்கப் பட்டு, 28ம் தேதி விசுவநாதருக்கு அந்தப் புனித தீர்த்தத்தில் ஒரு பகுதி அபிடேகம் செய்யப்பட்டு மற்ற பகுதியை உத்திரப் பிரதேச முதல் அமைச்சர் மாண்புமிகு யோகி ஆதித்யநாத் அவர்கள் நம்மிடமும்,AL.AR கட்டளையின் பிரதிநிதி திரு.அருணாசலம் அவர்களிடமும் அளித்தார்கள்.

அந்தப் புனித தீர்த்தம் காசியில் இருந்து இராமேசுவரம் வந்தபின் இராமநாத சுவாமிக்கு நாள்தோறும் அவர்கள் செய்து வரும் பள்ளியறை பூசைக்குப் பயன்படுத்திக்

ஆகஸ்டு 9ம் தேதி காசி விசுவநாதருக்கு பௌர்ணமி அபிடேகம் செய்வதாக உத்தேசித்துள்ளார்கள்.

அந்த சிறப்பு அபிடேகத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் அவர்கள் செலவில் வந்து கலந்து கொள்ளலாம் அபிடேகத்தைக் காணும் அனுமதியை நாம் பெற்றுத் தர இயலும்

எனவே நாளும் திரிவேணி, இராமேசுவர தீர்த்தங்கள் சிவார்ப்பணம் ஆகும். இத்தீர்த்தங்கள் அனைத்தும் சிவனாகவேக் கருதி பூசிக்கப்பட்டு அனுப்பப்பெறுகின்றன. பெறும் இடத்தில் சிவமரியாதை செலுத்தப்பட்டு ஏற்கப்படும்.

கொள்வதுடன் சிவபெருமானுக்கு உரிய சிறப்பு நாட்களில் சிறப்பு அபிடேகங்களுக்கும் பயன்படுத்துவது என்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகஸ்டு 3ம் தேதியன்று இராமேசுவரம் கோடித்தீர்த்தம் மற்றும் மணல் எடுக்கப்பட்டு இராமநாத சுவாமிக்கு பூசை செய்து, வாத்தியங்கள் முழங்க, காசிக்கு அனுப்பப்பட்டு காசியில்

இத்தகைய புண்ணிய சங்கமம் உருவாக காசி விசுவநாதரே காரணம். அவரின் பேராற்றலே இத்தகைய

Koviloor Digital Library

கொண்டவன் இராசேந்திர சோழன். இவனின் ஆட்சிச் சிறப்பினைக் கொண்டாடும் வண்ணமாக கங்கை கோண்ட சோழபுரத்தில் 27. 7.2025 அன்று பெருவிழா கொண்டாடப்படுகிறது. பலநாள்கள் நடைபெறும் இவ்விழாவில் மாண்பமை

அதிசயங்களை நிகழ்த்துகிறது.

சொல்லின் செல்வர் சொ.சொ.மீ .சுந்தரம் அவர்களின் பெரியபுராண விரிவுரை நிறைவு நிகழ்ச்சி

24.7.2025 அன்று சென்னை ஆவிச்சி கல்லூரி அரங்கில் சொல்லின் செல்வர் சொ.சொ.மீ சுந்தரம் அவர்களின் பெரியபுராண நிறைவுரை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டது நமக்குக் கிடைக்காத நற்பேறு. சொ. சொ. மீ அவர்களின் தேன்தமிழ், பக்தித் தமிழ் ஒலி ஒளிப்பதிவாகி நமக்குக் கிடைக்க உள்ளது. இதனை அனைவரும் வாங்கிப் பெற்று சிவஞானப் பேறு பெற வாழ்த்துகிறோம்.



கங்கை கொண்ட சோழபுரத்தில் ராசேந்திர சோழனின் புகழ் விழாவில் பிரதமர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி

பிரதமர் அவர்கள் கலந்துகெண்டார்.

கங்கை வரை சென்று ஆட்சி

நாமும் மற்ற ஆதீனங்களும் இதில்

Koviloor Digital Library

கலந்துகொண்டு

கங்கை ,காவிரி இணைப்பினை மகிழ்ந்து ஏற்றோம்.

செட்டிநாட்டில் இனி எந்த வீடும் இடிக்கப் படக் கூடாது

இந்தக் கருத்தின் கருவை உருவாக்கியவரான திரு செல்வம் அழகப்பன், கூடுதல் அரசு வழக்குரைஞர் திரு.AR.L சுந்தரேசன், மூத்த வழக்குரைஞர் திரு.வள்ளியப்பன், கட்டிடக்கலைஞர் திரு.பெரியணன்,முதலீட்டாளர்கள் திரு.அம்பா பழனியப்பன், திரு.EMC.பழனியப்பன் மற்றும் திரு.DSP முத்துக்குமார் ஆகியவர்களைக் கொண்ட ஒரு அறக்கட்டளை நிறுவுவது என்று தீர்மானித்து, இந்தக் கருத்தை செயல்படுத்த விரிவான செயல்திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

இதற்கான முதல் கூட்டம் 26ம் தேதி சென்னையில் நடைபெற்றது. அந்த அறக்கட்டளைக்கு நாம் ஆலோசகராக இருப்போம். இதற்கான துவக்க நிலை செலவுகளுக்கு நாம் தனிப்பட்ட முறையில் நன்கொடையாக மூன்று லட்சம் ரூபாய் அளிப்பதாகத் தீர்மானித்திருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சி குறித்த காணொளியைக் காண பின்வரும் இணைப்பை கிளிக் செய்யவும்

சம்பூர்ணானந்த் சமஸ்கிருத விஷ்வ வித்யாலயா பல்கலைக்கழகத்தின் பழமை வாய்ந்த நூல்களை மின் நூல்களாக வடிவமைத்துப் பாதுக்காத்தல்

காசியில் உள்ள சம்பூர்ணானந்த் சமஸ்கிருத விஷ்வ வித்யாலயா பல்கலைக்கழகத்தின் நூலகம் மிகப் பழமை வாய்ந்த பல நூல்களை, கையெழுத்துப் பிரதிகளைக் கொண்டுள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதான பாகவதம் கைப்பிரதியாக இன்னமும் இங்கு உள்ளது. இராமாயண எழுத்துப்பிரதிகள் மருத்துவ கை எழுத்துப் பிரதிகள் போன்றன இங்குள்ளன.

இந்தப் பல்கலைக்கழகத்தின்

Koviloor Digital Library

காசி விஸ்வநாதர் கோவில் தலைமை செயல் அதிகாரி திரு.விஸ்வபூஷன் மிஸ்ரா அவர்களும் சமஸ்கிருத பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.பிகாரி லால் சர்மா அவர்களும் புராதனமான கையெழுத்து பிரதிகளை மின்நூலாக மாற்றும் நிகழ்வைத் துவக்கி வைத்த மகிழ்வான தருணம்

துணைவேந்தருடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது இப்பல்கலைக்கழகத்தின் நூலக அரிய பொக்கிஷங்கள் குறித்து அறிய முடிந்தது. இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்து இதன் அரிய ஆவணங்களை மின் நூல்களாக இணையத்தில் ஏற்றிடச் செய்யலாம் என்ற முன்னேற்ற திட்டத்தை நாம் முன்வைத்தோம். மத்திய அரசின் சார்பில் இந்நூலக நூல்கள் பாதுகாக்க பல திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன. அவை நூல்களைப் பாதுகாக்கும் நோக்கில் செய்யப்படுவன.

நாம் இந்நூலகத்தின் பழமையான நூல்களை மின் நூல்களாக்கி இணைய வழியில் அனைவரும் படிக்க ஆவன செய்யலாம் என்று சொன்ன யோசனையை முன்வைத்து, இப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் நூல்களை மின் நூல்களாக மாற்ற ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்.

ஆயிரம் வருடம் பழமையான பாகவதம், கையெழுத்துப் பிரதியை காணும் பாக்கியம் பெற்ற நேரம்

இதற்காக 29.07.2025 அன்று காசிக்கு நாம் சென்று இந்நூல்களை மின்னூல்களாக ஆக்கும் பணியைத் தொடங்கினோம்.

நமது பக்கத்தில் இருந்து இரண்டு மின்நூல்கள் ஆ க் கு வ த ற் க ா ன க் கருவித் தொகுதிகள் அப்பல்கலைக்கழகத்திற்குப் புதிதாக வாங்கப்பெற்று அவை காசிக்கு வந்து சேர்ந்துள்ளன. நமது மாடாலய நூலகர் இக்கருவிகள் கொண்டு மின்னூல்கள் ஆக்கி அங்குள்ளப் பணியாளர்களுக்குப் பயிற்சி தரவும் ஏற்பாடு ஆகியுள்ளது. இதன் வழியாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைப் பிரதிகள், பழமை வாய்ந்த நூல்கள் உலக மக்களுக்குக் கிடைக்க உள்ளன. ஞானதானம் என்ற அடிப்படையில் இந்நூல்கள் பெருத்த அறிவு விருத்தியை உண்டாக்கும்.

சமஸ்கிருத பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.பிகாரி லால் சர்மா அவர்களுடனும் காசி விஸ்வநாதர் கோயில் தலைமை செயல் அதிகாரி திரு.விஸ்வபூஷன் மிஸ்ரா அவர்களுடனும் கலந்துரையாடிய காட்சி

சமஸ்கிருத உன்னத அரும்பெரும் அறிவுக் களஞ்சியம் இணைய வெளியில் கோவிலூர் மடாலயத்தின் வழியாக உலக மக்களுக்குக் கிடைக்க நமக்குக் காசி விசுவநாதர் கடைக்கண் காட்டியுள்ளார். வடமொழி நூல்களின் செழுமையைத் தமிழ் உலகிற்கு அளிக்கும் கடமை நமது கோவிலூர் மடாலயத்திற்கு உண்டு. அவ்வழியில் வடமொழி நூல்களைக் கொண்ட அறிவுக் களஞ்சியம் உலக மக்களுக்குக் கிடைக்க கோவிலூர் மடாலயம் வழி வகுத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு பல முன்னேற்றம் மிக்கச் செயல்பாடுகள் அவனருளால் அவன் தாள் வணங்கி நடைபெற்று வருகின்றன. இன்னமும் பற்பல தொண்டுகளைச் செய்ய காசி விசுவநாதர் நாளும் நமக்கு உறுதுணை புரிந்து வருகிறார். அவருக்கு கோடான

Koviloor Digital Library

கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் அறிமுகம் – 4

திருவேங்கடநாதர் இயற்றிய கீதா சாரத் தாலாட்டு

பகுதி- 2

- முனைவர் மு.பழனியப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவாடானை

கீதா சாரத் தாலாட்டு என்ற நூல் கீதையின் அடிக்கருத்துகளை முன்வைத்துத் தாலாட்டு வடிவில் வேதாந்தக் கருத்துகளுக்கு விளக்கங்கள் தருவதாகும். இதனுள் ஆன்மாவைப் பற்றிய விளக்கம், அதன் இயல்பு, பிரம்மத்துள் ஒன்றாய் அது நிற்கும் இயல்பு போன்ற செய்திகள் விளக்கப்படுகின்றன.

''நான்''

நான் என்ற பற்று நீங்கினால் வீடு பேறு அடையலாம். '' நான்'' என்ற பற்று எவ்வாறு உடலுக்கு வந்து சேர்கிறது என்று அர்ச்சுனன் கிருஷ்ணனைப் பார்த்து வினா எழுப்புகிறான். இதற்கு விடை தருகிறார் கிருஷ்ண பரமாத்மா.

ஆத்மாவைச் சார்ந்திருக்கும் அறியாமையே ஆத்மாவின் உண்மையான நிலையை அறியவிடாமல் செய்கிறது. ''நான்'' என்பது எது என்று அறியாமலே ஆன்மா இருக்கிறது. ஆன்மாவின் அறியாமை நீங்கிவிட்டால் உடலின் மீது உள்ள பற்று நீங்கும் . '' நான் '' என்பது நீங்கிவிடும். ஆன்மாவானது தனது ஆன்ம நிலையை உணரவேண்டும். அப்போது ''நான்'' என்பது நீங்கும்.

Koviloor Digital Library

ஆன்மாவின் அறியாமையும், மெய்ப்பொருள் அறிவும்

ஆன்மாவிற்கு ஏற்பட்ட அறியாமை இடையில் வந்தது அல்ல. ஆன்மா அது தோன்றிய காலத்தில் இருந்தே அறியாமையைப் பெற்றதாக உள்ளது. இந்த அறியாமை என்பது மெய்ப்பொருள் பற்றிய அறிந்து கொள்ளும் நிலையில் நீங்கிவிடும். மெய்ப்பெ௱ருளைப் பற்றிய அறிவு இருவழிகளில் கிடைக்கலாம். குருமுகமாகவும், வேதாந்த நூல்கள் வழியாகவும் மெய்யறிவு கிடைக்கலாம். மற்றொரு வகை அனுபவத்தினால் கிடைக்கக் கூடியது ஆகும். கேள்வி அறிவினாலும், மனத்தாலும், தொடர்ந்து செய்யும் சாதனைகளாலும் ஆன்மா தானே பிரம்மம் என்பதை அறியும். அப்போது உடலே ''நான் '' என்ற அறியாமை நீங்கும்.

உலகம் பொய்

மெய்ஞானம் வந்துவிட்டால் கனவில் காணுகின்ற உலகம் போலக் கண்ணால் காணப்படும் உலகமும் பொய் என்பதை உணரமுடியும். மெய்ஞானம் வந்துவிட்டால் இன்ப துன்பங்கள் என்பன எந்தப் பாதிப்பையும் அளிக்காது. மெய்ஞானம் வந்துவிட்டால் ஆன்மாவிற்குப் பற்று இருப்பதில்லை. ஆன்மாவிற்கு வீடுபேறும் இல்லை.

பரம்பொருள் ஒன்றுதான், ஆன்மா பல

எல்லாம் அடங்குவதும் விரிவதும் பரம்பொருளே ஆகும். பரம்பொருள் ஒன்றாக இருக்க பல ஆன்மாக்கள் ஏன் தோன்ற வேண்டும். ஏன் அவை பரம்பொருளுக்குள் அடங்க வேண்டும் என்ற வினாவை அர்ச்சுனன் கேட்கிறான். இதற்குக் காற்றினால் கடலில் குமிழிகள், அலைகள் தோன்றுவதுபோல, பரபிரம்மத்தில் மாயை சம்பந்தப்படும்போது பல சீவர்கள் தோன்றுகிறார்கள் என்று கண்ணன் பதிலளிக்கிறார்.

இவ்வாறு இருக்கும்போது சீவாத்மா, பரமாத்மா என்ற இரண்டு உண்டா என்ற சந்தேகம் எழலாம். சீவாத்மா பரமாத்மாவை அடைவதுதான் முக்தியா என்பதும் ஒரு கேள்வியாக அமைகிறது.

இரண்டு என்பது இல்லை. ஒன்றுதான். அதுவே பிரம்மம். ஆன்மாவும் பிரம்மத்திற்கு அந்நியமானது அல்ல. துக்கம் வருவதற்குக் காரணமான புத்தி நீங்கினால் இரண்டும் ஒன்றே.

Koviloor Digital Library



நூலின் இணைய இணைப்பு

சீவன் முத்தர்கள்

நான் என்பது நீங்கி, துன்பங்கள் நீங்கி வீடு பேறு அடையத் தக்கவர்கள் சீவன் முத்தர்கள் ஆவர். இவர்கள் பேரின்ப நிலையை அடைவார்கள். அப்பேரின்ப நிலை இன்ன தன்மையது என்று சொல்ல முடியாத அளவினதாகும். சீவன் முத்தர்கள் தாயின் கருவிலிருந்து பிறந்தவர்கள்தான். அவர்கள் பிறத்தல், வளர்தல், பெருத்தல், சிறுத்தல், அழிதல் ஆகியன உடலுக்கே என்று அறிந்தவர்கள். பசியும் தாகமும் உடலுக்கான தர்மம் என்று அறிவார்கள். அவர்கள் அச்சம், துக்கம், ஆசை, சினம் ஆகியன மனம் சித்தி புத்தி அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்களுக்கு உரியது என்று உணர்வார்கள். வீடு, மனைவி,சுற்றத்தாரென வாழ்ந்தாலும் அவ்வாழ்வில் தாமரை இலைத் தண்ணீர் போல வாழ்பவர்கள் சீவன் முத்தர்கள். உடலையும் ஆன்மாவையும் பற்றி அறிந்த அவர்கள் புளியம்பழ ஓடுபோல உடற்பற்று நீங்கி வேறுபட்டு நிற்பார்கள். உலக வாழ்வில் தம் கடமைகளைப் பற்று இல்லாமல் அவர்கள் செய்துவருவார்கள்.

இவ்வாறு அர்ச்சுனன் எழுப்பும் வினாக்களும் கிருஷ்ண பரமாத்மாவின் பதில்களும் இணைந்து வேதாந்த விழுப்பொருளை விளக்கம் செய்வதாகக் கீதா சாரத் தாலாட்டு அமைகின்றது.

Koviloor Digital Library

சமய எழுச்சியால் சமூக மறுமலர்ச்சி காட்டிய

அப்பர்

பகுதி – 16

அப்பர் எனும் ஆசான் உணர்த்திய தவநெறி

ஞானியருக்கும் அடியவருக்குமிடையிலான இடைவெளியை அளவிலாப் பெருவெளியாக்கிக் காட்டுவனவற்றுள் முதன்மையானது தவநெறியும் அதன் பயனும். உடலைப் பலவாறாக வருத்தியும் மனதை ஒருமுகப்படுத்தியும் கடுந்தவமிருந்த இறைநம்பிக்கை நெறிகளுக்கிடையில், அன்பே பத்திமையென்று உணர்த்தியோர் நாயன்மார் என்பதை அறிவோம். இப்போக்கில் அப்பர் நடத்திய சமூகப் பாடங்களுள், தவம் பற்றி அவர் குறித்தவை இன்றும் சாலப் பொருந்தும் எளிய நெறிகள். அவற்றுள், பழந்தமிழர் போற்றிய சில கோட்பாடுகள் தம் சமகாலச் சமூகத்திலும் தொடர்ந்திடப் பாடியதை அப்பரின் பதிகங்கள் உணர்த்தும்.

திருமதி மு. சுப்புலட்சுமி,
வரலாற்றாய்வர்
ஆசிரியர்: www.glorioustamils.com,
www.attraithingal.com,
வலையொலி/ podcast
அற்றைத்திங்கள்...
வலையொலியில் தமிழொலி

சங்ககாலத் தவம்

குன்றக் குறவன் கடவுள் பேணி

Koviloor Digital Library

இரந்து எல்வளைக் குறுமகளைப் பெற்றதைக் காட்டும் ஐங்குறுநூற்றுப் பாடலின் நீட்சியே இன்றும் தொடரும் 'தவஞ்செய்து பெற்ற குழந்தை' என்ற சொல்லாடல். சங்கப் பாடல்களில் தவம் எப்போதெல்லாம் குறிக்கப்பட்டது என்பதே சுவையான தகவல்தான். அருந்தவம் ஏதும் புரியாத தன்னால் தலைவனின் பிரிவைத் தாங்க இயலுமா என்று தவித்தாள் தலைவி (ஐங்குறுநூறு 111); 'முன்முறை செய் தவத்தின் பயனால்' அம்முறை வையையில் தை மாதத்தில் நீராடி மகிழ்ந்தனராம் மக்கள் (பரிபாடல் 11). குறிப்பாக, தையில் நீராடிப் பெண்கள் நோன்பு முடித்ததைத் தவமென்று பல பாடல்கள் சுட்டுகின்றன.

'மரம் சா மருந்தும் கொள்ளார் மாந்தர்; உரம் சாச் செய்யார் உயர்தவம்'ஷெ மரத்தினின்று மருந்து எடுப்பதும், உடல் வருத்தித் தவம் செய்வதும், அரசன் மக்களுக்கு வரி விதிப்பதும் அளவோடே இருக்க வேண்டும் என்று கூறுகையில், தவத்திற்கும் வரையறை வகுத்தது நற்றிணையின் அகப்பாடல் (நற்றிணை 226). ஈகையும், மாண்பும், வளனும், நன்மக்கள் பேறும், இறையருளும் தவம் உடையோர்க்கு வாய்த்த பலன்களென உணர்ந்தவர் பெருஞ் சேறல் இரும்பொறையென அரிசில் கிழார் பாடியது (பதிற்றுப்பத்து 74), தவம் குறித்த பரந்துபட்ட புரிதலைக் காட்டும்.

கலித்தொகையின் மடலூர்ந்த தலைவன், தன் காதலை ஏற்காத பெண் குறித்து ஊர்ப்பெரியவர்களிடம் பேசுகையில், தவமே மேலுலகம் அடைவதற்கான

Koviloor Digital Library

வழியென்று மொழிந்தான் (கலி 139); மற்றுமொரு தலைவன், தன்நிலை கண்டு தலைவி அன்புற்று இரங்கியதால் அருந்தவம் முயன்று தம் உடம்பை ஒழித்து மேலுலகம் எய்தியவர்களைப்

ஆடவல்லான்

போன்று பரவசநிலை அடைந்தானாம் (கலி 138).

தவம் என்பது இயல்பு வழக்கை மீறி உடலையும் மனதையும் அடக்கியாண்டு எய்தும் நிலையென்பது பதிந்திருந்தாலும், கடவுள் பேணலோடு அறம் வழுவாதிருத்தலைப் பழந்தமிழர் பெருந்தவமென்று கருதியதைப் புறநானூறு பெரிதும் உணர்த்தக் காணலாம். கூடுதலாக, சங்ககாலத் தவமும் தவப்பயனும், வாழ்வோடு கலந்த ஏக்கம் கவலை மகிழ்வு நிறைவு போன்ற பலதரப்பட்ட உணர்வுகளின் பின்னரே இடம்பெற்றதையும் அறியலாம்.

பிற்சங்க இலக்கியமான பரிபாடல், 'அறத்தொடு வேதம் புணர் தவம் முற்றிய' அந்தணர் வாழும் இருந்தையூரைக் காட்டுகிறது. புறநானூறு (358), 'வையமும் தவமும் தூக்கின் தவத்துக்கு ஐயவி அனைத்தும் ஆற்றாது' உலகையும் தவத்தையும் நிறுத்துப் பார்த்தால் தவத்திற்குமுன் உலகம் கடுகளவுகூட ஒப்பாது என்றுகூறி, உலகப் பற்றுகளைத் துறந்தவர்களே தவத்தினர் என்ற கருத்தை முன்வைக்கிறது. அடுத்து வந்த வள்ளுவரும் 'பற்றுக பற்றற்றான் பற்றை' என மொழிந்தார்.

அவரே, உற்றநோய் நோன்றல் (தம் துன்பம் பொறுத்தல்), உயிர்க்குறுகண் செய்யாமை (பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமை), தன்னுயிர் தான்அறப் பெறுவது (தானென்னும் எண்ணம் இல்லாமை) என்றிவற்றைத் தவத்தின் முதன்மைப் பண்புகளாகக் குறித்தார்.

அடுத்து வந்த காலம், இறைவன்பால் கொண்ட பேரன்பே பத்திமையென்று அழுந்தச்

Koviloor Digital Library

சொன்னது. அடியார்களுடன் தம் வாழ்க்கைப் பயணத்தைப் பகிர்ந்த அப்பர் எனும் தொண்டர், நெறியுடன் வாழ்தல் மனிதம் பேணல் தொண்டு செய்தல் சமூக மாண்புகள் காத்தல் என்று அறம் வலியுறுத்தி, இறைப்பற்று தனித்த களமாக ஒதுங்கி நில்லாது சமூகம் சார்ந்த ஒன்றாகவே தழைத்திட அவர்களைக் கைப்பிடித்து வழிநடத்திய பேராசானாகவும் திகழ்ந்தார்.

இறைவன் எளியவன்

பழந்தமிழர் போற்றிய எளிய தொண்டுமுறைகளே பத்திமைக்காலத் தவத்தை உணர்த்துவதாக அமைய வேண்டுமென அப்பர் பெரிதும் பாடுபட்டார். தன்னலமற்ற இறையன்பே அருந்தவம் என்பதை விடாது வலியுறுத்திட, முதற்படியாக இறைவன் எளியவன் என்பதை அடியவர் மனங்களில் பதியவைக்க முயன்றார்.

‘காதலிப்பார்க் காற்ற எளியனான’ திருவாரூர் ஐயன் திருமறைக்காட்டில், ‘காண்டற் கரிய கடவுளானாலும் கருதுவார்க் காற்ற எளியான்’ என்றார். ‘காட்சி பிறர்க்கெலாம் அரியர் தொண்டர்க் கெளியர் ஐயாறரே’ என்றவர், திருஇன்னம்பரில்

‘வெளிவளர் உருவர் போலும்
வெண்பொடி யணிவர் போலும்
எளியவ ரடியார்க் கென்றும்
இன்னம்ப ரீச னாரே’

என்று வியந்தார்.

இறைவனை எளியானென்று மீண்டும் மீண்டும் பறைசாற்றியவர், மாதவம் செய்தோரை எப்படியெல்லாம் போற்றினார்? தீதவை செய்து தீவினையில் வீழாதவர், இறைவனைக் கருத்தினில் வைத்துக் காதல் செய்த மாதவர் என்று அங்கும் அறத்தையே முன்வைத்தார் அவர். தீவினை ஒழிப்பதே நல்ல தவம் என்று நம்பிக்கை ஊட்டிக்கொண்டே யிருந்த முன்னவர் அவரன்றோ? அதனால்தான், நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே புகுந்து நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன், பொக்கமிக்கவர் (பொய் நிறைந்தவர்) பூவும் நீருங்கண்டு அவர்கள் நாணுமாறு சிரித்து நிற்பார் என்று எச்சரித்தார்.

தவம் எது?

இறைவன் எளியான் என்றால், அவனை நோக்கிப் புரியும் தவமும் எளியதாகத்தானே இருக்க வேண்டும்? அப்பர் வாக்கில் தவமாவது எது?

முன்னை வினைகளிலிருந்து

Koviloor Digital Library

விடுபடவேண்டும் என்று வேண்டும் பேதைகாள்! மாதவன் தன்னை ஐயாற்றில் தொழத் தவமாகுமே (05.027.08); கொண்டீச் சுரவனைத் தலையினால் வணங்கத் தவமாகுமே (05.070.10); திருவையா றமர்ந்த தேனை அடுத்து நின்றுன்னு நெஞ்சே அருந்தவஞ் செய்தவாறே (04.039.05) என்று நெஞ்சில் இறைவனை நினைந்துருகுவதே அருந்தவம் என்றுரைத்ததற்கு விளக்கமும் வேண்டுமோ!

தொழுதலும் வணங்குதலும் நெஞ்சில் நினைந்துருகுதலும் தவமேயென்று சொல்லக்கூடியவர் அப்பரெனும் எளியரே. அதுமட்டுமல்ல, இறைவனடியை வாழ்த்தி வணங்க, தவம் பெருகுவதோடு கிட்டும் பலன்களின் பட்டியலையும் ஒரு பாடலில் தந்தார்

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்

திருக லாகிய சிந்தை திருத்தலாம்

பருக லாம்பர மாயதோ ரானந்தம்

மருக லானடி வாழ்த்தி வணங்கவே

(05.088.01).

புரியாதோருக்கு மேலும் தெளிவுபடுத்த, "மற்று நற்றவஞ் செய்து வருந்திலென்ஞ்.. கழற் சேவடி பற்றிலாதவர்க்குப் பயனில்லையே" (05.099.10) என்று கடிந்து சுட்டி, இறைவன் திருவடி பற்றலே பெருந்தவமெனக் கொணர்ந்தார் அப்பர்.

"சேறையுட் செந்நெறி மன்னு சோதி நம்பால் வந்து வைகவும், அந்தமில் புகழாரூரரனெறி சிந்தையுள்ளுஞ் சிரத்துளுந் தங்கவும், என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே," என்று இறைவன் தங்கிய தன் நெஞ்சை நயந்து வினவினார். அந்த நெஞ்சம் செய்த மாதவம் இறைவர்பால் கொண்ட ஈடற்ற பேரன்பே என்பதில் ஐயமுமுண்டோ?

கூடுதலாக, நான்காம் திருமுறையின் பொதுப் பதிகத்தில், இறைவன் குடியிருக்கும் சரக்கறையெனத் தம் நெஞ்சை அடையாளப்படுத்திய நாவுக்கரசர், இறுதிப் பாடலில் அந்நெஞ் சைப் புலித்தோலும் பொடிநீறும் சிரமாலையும் சூடிய இறைவன் தவமிருக்கும் சரக்கறையென அறுதியிட்டுப் பாடியது அப்பரெனும் எளிய அடியாரின் மேன்மைமிகு பத்திமை நெறியைக் காட்டிநிற்கும்.

இறைவன் மாதவன்

'திருவாரூரனான என் சிந்தையான், மாதவன்காண் மாதவத்தின் விளைவானான்காண்,' என்றார் (06.024.02).

Koviloor Digital Library

இறைவனை மாதவத்தான் என்று ஏன் குறித்தார் அவர்? அதற்கு விடை திருக்குறளில் உண்டு. 'ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணின் தவத்தான் வரும்,' தீமை செய்யும் பகைவரை அடக்குதலும் நன்மை செய்யும் நண்பரை உயர்த்துதலும் தவ வலிமையால் உண்டாபவையாம். வள்ளுவர் உரைத்த ஒன்னார்த் தெறலைச் சிவனின் வீரச் செயல்கள் உணர்த்த, அன்பர்க்கு எளியனாக அருள்புரியும் செயல்பாடே உவந்தாரை ஆக்கல். வள்ளுவம் வகுத்த தவப்பயனோடு முழுமையாகப் பொருந்தும் சிவபெருமான் மாதவத்தரன்றோ?

தவத்திற்கு விளக்கமளிக்கும் திருச்சாய்க்காட்டுப் பதிகம்

திருச்சாய்க்காட்டுப் பதிகம் நுட்பமாக நோக்கவேண்டிய ஒன்று. பேரன்பே தவமென்று அறுதியிட்டுப் பாடிய பதிகமது. இதில், மார்க்கண்டேயன், கோச்செங்கணான், அருச்சுனன், சண்டீசர், பகீரதன், கண்ணப்பர், திருமால் என்றிவர்களுடைய தவத்தையும் தவப்பயனாம் இறையருளையும் பிரித்தும் விரித்துமுரைத்தார் நாவுக்கரசர். அனைத்துத் தவங்களும் ஒரு சீரானவையா? அந்தப் பார்வையில்தான் வேறுபாடு காட்டிச் சிந்திக்க வைத்தார் அப்பரெனும் ஆசான்.

மார்க்கண்டேயன், அருச்சுனன், பகீரதன் மற்றும் திருமாலுடைய தவங்கள், பலன் வேண்டிச் செய்தவை. கோச்செங்கணான், சண்டீசர் மற்றும் கண்ணப்பரின் தவங்களோ பேரன்பும் அதன் வெளிப்பாடும். பலன்வேண்டிச் செய்த தவத்தால் இறைவனின் சிறப்பை உணர்கிறோம்; ஆனால், அன்பொன்றை மட்டுமே தவமாகக் கொண்ட பின்னவர் மூவர் வாழ்வை இன்றும் நெகிழ்ந்து போற்றுகிறோம்.

மார்க்கண்டேயன் தவம்

'கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு' என்றதன் விளக்கமே மார்க்கண்டேயன் வாழ்வு.

பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான ஏலாதியும், காலன் நம்மை அணுகாதிருக்க, தவமே வழியென்றது.

அழப் போகான், அஞ்சான், அலறினால் கேளான்,

எழப் போகான், ஈடு அற்றார் என்றும் தொழப் போகான்,

என்னே, இக் காலன்! நீடு ஓரான், தவம் முயலான்,

Koviloor Digital Library

கொன்னே இருத்தல் குறை (ஏலாதி 37]

தோடுலா மலர்கள் தூவித் தொழுதெழுந்த மார்க்கண்டேயன், இறைவன் பாதத்தில் சரணடைந்து வேண்டிய பலன் தன் வாழ்நாள் நீட்டிப்பு. இறைவனைச் சரணடைந்தால், கூற்றுவனை



காலனை உதைத்தவர்
கொடும்பாளூர்

வெல்லும் வலிமை கிட்டும் என்றும், வலிய செயலைத் தாம் செய்து பத்தருக்குப் பெருமகிழ்வுப் பலனை வழங்குவார் இறைவன் என்றும் நிறுவும் வாழ்க்கை விளக்கமிது. எனினும், இலக்கொன்றை முன்வைத்தே செய்த தவமது.

அருச்சுனனும் பகீரதனும் செய்த தவம்

தவம் செய்த அருச்சுனன்முன் வேடனாக வேடமிட்டுத் தன் பேராற்றலைக் காட்டிப் பின், ‘வரம் பெரிதுடையனாக்கி வாளமர் முகத்தின் மன்னுஞ் சரம்பொலி தூணியீந்தார் சாய்க்காடு மேவினார்’, என்று பார்த்தனுக்குப் பாசுபதம் வழங்கிய நிகழ்வை அப்பர் காட்டுவது, பொருள்கருதித் தவமிருந்து எய்திய இலக்கு.

தம் முன்னோர் நற்கதியடைய வேண்டி பகீரதன் கடுந்தவம் புரிந்தான். குற்றமற்ற மனத்துடன் கங்கை வானுலகிலிருந்து மண்ணுலகம் வருமாறு வரம்வேண்டிய பகீரதனுக்காகக் கங்கையைத் தன் சடைமுடியில் ஏற்றாராம் சாய்க்காடு மேவிய இறைவன். பகீரதன் கடுந்தவம் பத்திமை உலகம் அறிந்த ஒன்றே.

அருச்சுனன் வேண்டிக் கிட்டியது சாய்க்காட்டு இறைவர் வழங்கிய சரம்பொலி தூணி. கங்கை யென்னுந் தையலைச் சடையிலேற்றதில் பகீர்தனுக்குக் கிட்டியது முன்னோரின் நற்கதி.

Koviloor Digital Library

இந்த மூவர் தவங்களிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டது கோச்செங்கணான் மற்றும் சண்டீசரின் தவம். அது, பொருளல்லாது இறையருளை மட்டுமே வேண்டிய பேரன்பின் தவம், திருத்தொண்டின் தவம். அதைத்தான் அப்பர் இப்பதிகத்தின் வாயிலாக விளக்க முற்பட்டார்.

கோச்செங்கணான் தவம்

அரணிலா வெளியில் வளர்ந்த வெண்ணாவல் மரத்தின் அருநிழலில் ஈசனிருக்க, இறையன்பு மேலிடத் தன் வாய்நூலினால் நிழற்பந்தல் அமைத்த சிலந்தியை உலகாள முடிசூட்டினார் இறைவன். இறைவனுக்குக் கிட்டாத நிழலா? சிலந்தியமைத்த பந்தலுக்கான ஊக்கம் அன்பொன்றே அன்றோ? அதனால்தான், ‘சிலந்தி தன்னை முடியுடை மன்னனாக்கித் தரணிதானாள வைத்தார் சாய்க்காடு மேவினாரே’ என்று இப்பதிகத்தில், சிலந்தியின் அன்பெனும் தவத்திற்குத் தரணியாளும் பெரும்பதவி தந்து அழகு பார்த்த இறைவன் செயலை இணைத்தார் அப்பர்.

சண்டீசர் தவம்

விசாரசருமனார் என்பது சண்டீசரின் இயற்பெயர். பாலும் நெய்யும் கொண்டு இறைவனை நீராட்டி, அருச்சனைகள் செய்து, பூக்கள் நிறைந்த கொன்றை மாலை சூட்டி வழிபட்டார் அவர். இந்தப் பூசனைப் பொறாத தந்தையின் தாளைக் கூரிய மழுவினால் வெட்டினார் மகன். இறைத்தொண்டில் எக்காலத்தும் புரிந்துகொள்ள முடியாத அடியவர்கள் பலருண்டு. அவர்களுள் ஒருவர், தந்தையின் தாளை வெட்டிய சண்டீசர்.

இவர், பாலும் நெய்யும் பூவும் அளித்த தொண்டோடு நில்லாமல் இறைப்பூசைக்குத் தடை வந்துவிடக் கூடாதென்ற விசாரசருமரின் அளவிலா அன்பிற்காக, தாம் சூடிய கொன்றை மாலையை அவருக்குச் சூட்டிச் சண்டீசராக்கி உயர்த்தினார் சாய்க்காட்டு இறைவர்.

கண்ணப்பரும் திருமாலும் இறைவன்மேல் கண்ணப்பிய இருவர்

சிவவழிபாட்டில், இறைவனுக்குத் தம் கண்ணையகழ்ந்து கொடுத்தவர்கள் இருவர். ஒருவர் கண்ணையப்பிய தன் செயலால் கண்ணப்பர் என்று பெயர் பெற்ற திண்ணனார், மற்றொருவர் திருமால். அப்பர் சாய்க்காட்டுப் பதிகத்தில் இருவருடைய அன்பின்

Koviloor Digital Library

சண்டீச அருள்மூர்த்தி
பாவுண்டரீகபுரம்

வெளிப்பாட்டையும் விளக்கினார்.

பலன்கருதித் தவம்புரிந்த திருமாலுக்கு அவர் வேண்டிய ஆயுதத்தை வழங்கிய சிவனார், தூய அன்பின் திண்ணனாரைத்தான் தேவு (தெய்வம்) செய்தார்.

கண்ணப்பர் தவம் பெருந்தெய்வமாகச் செய்தார்

பூவொடு நீர்சுமந்தேத்தித் திருக்கோயிலில் தொண்டுசெய்த அடியவரிடையே கண்ணப்பர் வேறுபட்டவர். சிவன்மேல் கள்ளமில்லா அன்பைப் பொழிந்த வேடர் திண்ணனார், ஒரு கையில் வில்லும் மறுகையில் இறைச்சியும் வைத்திருந்தமையால், காளத்தி இறைவர் தாங்கியிருந்த பூக்களைத் தம் செருப்பால் நீக்கி, தூயவாய்க் கலசமாட்டினார். உவந்த பெருமான் கண்களிலிருந்து குருதி சோர்ந்தது. சற்றும் சிந்தித்து நேரம் விரயமாக்காத வேடர், சட்டென்று தம் கண்ணைப் பெயர்த்து இறைவனின் கண்களில் அப்பிய செயலை என்னென்று கொள்வது? அது தூய அன்பெனும் தவத்தால் விளைந்த தன்னிகரில்லாச் செயலன்றோ!

அதற்குப் பலனாக இறைவன் வழங்கியது என்ன? ‘திண்ணனாரைத் தவப்பெருந் தேவு செய்தார் சாய்க்காடு மேவினாரே’ என்றார் அப்பர். எளிய வேடரை மிகப்பெரிய தெய்வமாகச் செய்தார் இறைவன் என்று பதிகத்திலுரைக்கக் காரணமென்ன? எளியவரான இறைவன் எளியோரின் தூய அன்பையே பெருந்தவமாகக் கொண்டு பேரானந்தத்தை அருள்பவர் என்று உறுதியாய் இயம்பவே இங்ஙனம் விளம்பினார் அவர்.

Koviloor Digital Library

திருமாலின் தவம்

சிவனின் பூசைக்காகச் செய்யவொண்ணாச் செயல்கள் புரிந்த அடியவருண்டு; இறைவருண்டோ? உண்டு எனவுரைப்பது திருமாலின் திருத்தவம். திருமாலும் ஒருவகையில் கண்ணப்பரே. ஆயிரம் மலர்கள் கொண்டு நன்ஞானத்தோடு மிக்கபூசனைகள் செய்கையில் ஒரு மலர் குறைய, தம் கண்ணை அம்பினால் கொய்து மலராக அருச்சித்தார். திருமால் வெளிப்படுத்திய கடுந்தவச் செயலுக்குப் பின்னிருந்தது சக்கராயுதம் வேண்டிநின்ற வேட்கை. சிவனாரின் திருவிளையாடலில் வெற்றி பெற்று வேட்கைப் பயனுறத் திருமால் சக்கரம் பெற்று மகிழ்ந்தார்.

அடியவரின் பெருஞ்சொத்தாம் தூய அன்பே அனைத்துத் தவங்களிலும் மேம்பட்டதெனக் காட்டவிழைந்த நாவுக்கரசர், திருச்சாய்க்காட்டுப் பதிகமெனும் சொல்லோவியத்தை நுட்பமாகப் புனைந்தார். இறைப்பற்றில் கண்மூடி வழிபடும்போது ஒளிந்துநிற்கும் அந்த நுட்பம், தளைகளற்ற இறையன்பால் தெளிவுபடும்.

தமக்காய், தம் சுற்றத்துக்காய், தன்னலத்துக்காய்த் தவம் செய்தவர்களின் மனவுறுதிக்கும் அவர்கள் தம்பால் கொண்ட பத்திமைக்கும் மதிப்பளித்து வேண்டியன ஈந்த சிவபெருமான், தன்னலமில்லா அன்பரைத் தம்மவர் ஆக்கிக் கொண்டார். அவர்களைத் தம் பக்கத்திலிருத்தி உயர்வு தந்தார்.

இறைவன் எளியவனென்று தொடர்ந்து உணர்த்திய அப்பர், பத்திமை எளியதென்றும் அன்பே அதன் வேரென்றும் இறைவன் தொண்டருக்கு அணுக்கரென்றும் அழுந்தச் சொல்லி, பலர் தயங்கிய தவத்தையும் அன்பினால் எய்தும் எளிய முறையென்று போற்றினார். அறநெறி வழுவாத சமூகப் பார்வையோடு அப்பர் வலியுறுத்திய கருத்துகளைத் தெள்ளிதின் உணர்ந்தோருக்கு, வியப்பைக் காட்டிலும் அப்பர்பால் ஒப்பற்ற மதிப்பும் இணையற்ற அன்புமே விஞ்சி நிற்கும் என்பது ஐயமில்லை.

நன்றி: டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி

Koviloor Digital Library

கற்குடிக்கோயில்

பகுதி–4

இரா. கலைக்கோவன்,
இயக்குநர்,
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
வரலாற்றாய்வு மையம்,
திருச்சிராப்பள்ளி

பிச்சைத்தேவர்

வல முன் கையால் மானுக்குப் புல்லளித்தபடி மிதியடி அணிந்த திருவடிகளை நடக்கும் மெய்ப்பாட்டில் நிறுத்தியுள்ள பிச்சைத்தேவரின் இடப் பின் கைக் கடகத்தில் உள்ளது.

பிச்சைத்தேவர்

இட முன் கையில் தலையோடும் வலப் பின் கையில் உடுக்கையும் கொண்டு இடுப்பணியாகப் பாம்பைக் கொண்டுள்ள இறைவனின் தலையைச் சடைமகுடமும் மண்டையோடும் அலங்கரிக்க வலச்செவியில் மகரகுண்டலம். இடச்செவி நீள்செவியாக, நெற்றிக்கண் கொண்டிருக்கும் இறைவனின் முன், தலையில் சுமக்கும் பாத்திரத்தை இருகைகளாலும் பிடித்தபடி, பாம்பையே உதரபந்தமாகப் பெற்றுள்ள பூதம், தொடை வரையிலான ஆடையும் பனையோலைக் குண்டலங்களும் ஸ்வர்ண வைகாக்ஷமும் கொண்டுள்ளது.

உமை தழுவிய சிவபெருமான்

இடப்புறம் பிறை பெற்ற சடைமகுடம், வலச்செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம், இடையில் மான்தோலாடை கொண்டு நிற்கும் சிவபெருமானின் பின்கைகளில் மான், மழு. வல முன் கைக் காக்கும் குறிப்பிலிருக்க, இட முன் கை இறைவியைத் தழுவியுள்ளது. மகரகுண்டலங்கள், அரும்புச்சரம், பட்டாடை அணிந்துள்ள இறைவியின் வலக்கை கடகமுத்திரையில் அமைய, இடக்கை நெகிழ்கையாக உள்ளது.

உமாசந்திரசேகரர்

சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், சவடி, சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், முழங்கால்வரையிலான ஆடை, வீரக்கழல் அணிந்து நிற்கும் இறைவனின் பின்கைகளில் மழு, மான். முன்கைகள் அருட்குறிப்பிலும் காக்கும் குறிப்பிலும் உள்ளன. உடன் நிற்கும் உமையன்னை கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், கழுத்தணிகள், பட்டாடை பெற்று வலக்கையைக் கடகத்திலும் இடக்கையை நெகிழ்வாகவும் கொண்டுள்ளார்.

முருகன், வள்ளி, தெய்வானை

கரண்டமகுடம், சன்னவீரம், தொடைவரையிலான ஆடை அணிந்து நிற்கும் முருகனின் வலச்செவியில் குதம்பை. இடச்செவியில் மகரகுண்டலம். பின்கைகள் சக்தி, வஜ்ரம் கொள்ள, வல முன் கை காக்கும் குறிப்பிலும் இட முன் கை ஏந்தலாகவும் உள்ளன. முருகனின் வலப்புறமுள்ள தெய்வானை கிரீடமகுடம், குதம்பை, கேயூரம், ஸ்வர்ணவைகாக்ஷம் அணிந்து வலக் கையைத் தொடையருகே நெகிழ்த்தியுள்ளார். இடக்கையில் அல்லி. இடப்புறமுள்ள வள்ளி வலக்கையில் நீலோத்பலம் ஏந்தி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார். கரண்டமகுடம், ஸ்வர்ணவைகாக்ஷம், கடகவளை, பட்டாடை பெற்றுள்ள வள்ளியின் வலச்செவி நீள்செவியாக, இடச்செவியில் மகரகுண்டலம்.

Koviloor Digital Library

சண்டேசுவரர், பிள்ளையார்

தொடைவரை சுருக்கிய ஆடையுடன் சடைமகுடம், கழுத்தணிகள், முப்புரிநூல், உதரபந்தம், குதம்பைகள் கொண்டு நிற்கும் சண்டேசுவரரின் வலக்கையில் மழு. இடக்கை கடகத்தில் உள்ளது. பின்கைகளில் அங்குசம், பாசம் ஏந்தி, கரண்டமகுடம், சிற்றாடை பெற்று நிற்கும் பிள்ளையாரின் வல முன் கைத் தந்தம் கொள்ள, துளைக்கை இடக்கை மோதகத்தைச் சுவைக்கிறது.

சிற்பங்கள்

கற்குடி விழுமியநாதர் கோயில் சிற்பங்களில் அளவில் பெரியனவாக இறைவன் முகமண்டபக் காவலர்களையே குறிக்க முடியும். இடைநிலையினவாக இறையகக் கோட்டச் சிற்பங்களும் இறையகச் சுற்றில் உள்ள பிற திருமேனிகளும் மைவிழியாள் திருமுன் சுற்றில் உள்ள இறைத்திருமேனிகளும் அமையும். இவற்றுள் மிகச் சிலவே சோழர் காலத்தன.

காவலர்கள்

விழுமியதேவர் முகமண்டப வாயிலைக் காக்கும் காவலர்களுள், வடக்கரின் இடக்கால் தளத்திலிருக்க, வலக்கால் அருகில் உள்ள மழுவின் கத்திப்பகுதி மேல் இருக்குமாறு உயர்த்தப் பட்டுள்ளது. வலக்கை அச்சுறுத்த, இடக்கை மழுவைத் தாங்கலாக அணைத்துள்ளது. சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, முத்துமாலை, முப்புரிநூல், உதரபந்தம், கை வளைகள், சிற்றாடை அணிந்துள்ள இவரது அனல்விழிகளும் கோரைப்பற்களும் வலக்கை முத்திரைக்கேற்ப உள்ளன.

இடக்காலை மரக்கிளை மேல் இருத்தியுள்ள தெற்கரின் வலக்கால் தளத்தில் உள்ளது. வலக்கையைக் கிளைமீது தாங்கலாக நிறுத்தியுள்ள இவரது இடக்கை வியப்பில் விரிந்துள்ளது. வடக்கரைப் போலவே ஆடை, அணிகலன்கள் கொண்டுள்ள இவரது நெற்றியில் பட்டம்.

கோட்டச்சிற்பங்கள்

Koviloor Digital Library

விமான வடகோட்டத்தில் நின்றகோலத்தில் இருக்கும் சோழர்கால நான்முகன் பின்கைகளில் குண்டிகையும் அக்கமாலையும் கொண்டு, வல முன் கையில் காக்கும் குறிப்புக் காட்டுகிறார். சடைமகுடம், பூட்டுக்குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், பட்டாடை அணிந்துள்ள அவரது இடக்கை கடியவலம்பிதமாக உள்ளது.

தென்கோட்ட ஆலமர்அண்ணலும் கிழக்குக் கோட்ட அம்மையப்பரும் பிற்காலத்தவர்கள். வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணலின் பின்கைகளில் அக்கமாலையும் பாம்பும் அமைய, வல முன் கை சின்முத்திரையில் உள்ளது. சடைமகுடம், சிற்றாடை, மகர, பனையோலைக் குண்டலங்கள் பெற்று, முயலகன் மீது வலப்பாதம் இருத்தியிருக்கும் அவரது இடக்கையில் சுவடி. சடைமகுடத்துடன் வல முன் கையை அருகில் உள்ள நந்தியின் நெற்றியில் இருத்தி, இடக்கையில் மலரேந்தி நிற்கும் அம்மையப்பரின் வலச்செவி நீள்செவியாக, இடச்செவியில் பனையோலைக் குண்டலம். இறைவனின் ஆடை சிற்றாடையாக அமைய, அம்மை பட்டாடை பெற்றுள்ளார்.

முகமண்டபக் கோட்டங்களில் தென்புறம் பிச்சைத்தேவரும் வடபுறம் கொற்றவையும் சோழர் படைப்புகளாய்ப் பொலிகின்றனர். இவ்விரண்டு கோட்டங்களின் மேலும் குடையும் கவரிகளும் காட்டப்பட்டுள்ளன. குடைக்குக் கீழிருக்குமாறு தோரணம் செதுக்கப்பட்டுள்ளது. வல முன் கையால் மானுக்குப் புல்லளிக்கும் பிச்சைத்தேவரின் இட முன் கையில் தலையோடு. வலப் பின் கை உடுக்கை கொள்ள, இடப் பின் கையில் கவரி. இடையைச் சுற்றிய பாம்புடன் நக்கராக நீள் முத்துமாலை, சவடி, வஸ்திர முப்புரிநூல், சடைமகுடம் கொண்டு மிதியடி களுடன் நடைபயிலும் இறைவனின் வலச்செவியில் மகரகுண்டலம். இடச்செவியில் பனையோலை குண்டலம். மேற்கையில் தாயத்துப் போன்ற சதுரப்பட்டி கோத்த வளைகள். இவரது இளஞ்சிரிப்பும் மிடுக்கான நடையும் எழிலார்ந்த உடலமைப்பும் கற்குடி வளாகத்தின் உன்னதமான சிற்பமாக இவரையே முன்னிருத்துகின்றன.

வடகோட்டக் கொற்றவை பின்கைகளில் சங்கு, எறிநிலைச் சக்கரம் ஏந்தி, வல முன் கையைக் காக்கும் குறிப்பில் கொண்டுள்ளார். கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், மார்புக்கச்சு, சரப்பளி, ஸ்வர்ணவைகாக்ஷம், தோள்மாலை, சவடி, இடைக்கட்டுடனான சிற்றாடை பெற்று நிற்கும் தேவியின் இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது.

Koviloor Digital Library

(திருவிளையாடற் புராணம் தொடர்)

ஆடலுக்கு ஆட்படுவோம்

பாண்டிய நாட்டின் சிறப்பு

பகுதி-6

காசி ஸ்ரீ முனைவர்
நா.ரா.கி.காளைராசன்
(மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம்)

மதுரையில் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்கள் வடமொழியில் 18 புராணங்களில் ஒன்றான ஸ்காந்த புராணத்தில் சங்கர சங்கிதைஎன்ற தலைப்பில் சொல்லப்பட்டுள்ளன. இதைத் தமிழில் பாடுக என மதுரையில் வசித்த பெரியோர்கள் கேட்டுள்ளனர். அவர்களது விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலும், தனது பிறவிப் பயனை எய்தும் நோக்கத்துடனும் 64 திருவிளையாடல்களையும் தமிழில் மொழிபெயர்த்து, மதுரை அருள்மிகு சோமசுந்தரேசுவரர் சுயம்புலிங்கத்திற்கு முன் ஆறுகால் மண்டபத்தில் இருந்து திருவிளையாடற் புராணத்தைப் பாடியருளியுள்ளார் பரஞ்சோதி முனிவர். 3363 பாடல்களைக் கொண்ட திருவிளையாடற் புராணத்தின் தொடக்கமாக “காப்பு“, “நூற்பயன்“, “வாழ்த்து”பாடப் பெற்றுள்ளன. 6 முதல் 23 முடியவுள்ள பாடல்களில் “கடவுள்வாழ்த்து“ பாடப் பெற்றுள்ளது.அருள்மிகு சோமசுந்தரேசுவரர் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களைப் பாடுவதற்கு முன்பாகத் தலம், தீர்த்தம், மூர்த்தி என்ற மூன்றின் சிறப்புகளையும் பாடியுள்ளார். திருத்தலத்தின் சிறப்புகளாகக் கடவுள் வாழ்த்தை அடுத்து பாடப்பெற்றுள்ள பாண்டியத் திருநாட்டின் சிறப்புகளை இப்போது கற்போம்.

Koviloor Digital Library

சூழ்ந்த மதுரையே சிவபுரம் ஆகும். ஆனால் அந்த மதுரைக்கு வெளியிலே விளங்குகின்ற ஊர்களெல்லாம் இந்திரன் பிரமன் சக்கராயுதக் கடவுள் முதலான தேவர்களுடைய தருமங்கள் விளங்குகின்ற உலகங்களின் வடிவைப் போலிருக்கின்றன. மலைகளும் நதிகளும் நிலங்களும் தோன்றியிருக்கின்ற இந்த உலகமானது திருமாலின் திருவுருவைப்போன்று இருக்கின்றது. பாண்டிநாடானது அந்தத்திருமாலின் உந்தியில் பூத்த செந்தாமரை மலர் போன்று உள்ளது. அந்தத் தாமரைமலர்மேல் நீண்ட பொகுட்டுப்போன்று பொதியமலை இருக்கின்றது. அந்தப் பொகுட்டிலே மேவியிருக்கிற நான்முகன்போன்று, இந்த மலை மேல் அகத்திய முனிவர் இருக்கின்றார்.

அந்தப் பாண்டிநாட்டின் பெருமைகளைப் பலவாறு சொல்லலாம். என்றாலும், எல்லாவற்றிலிரும் இருந்து பாண்டிநாட்டில் உள்ளவை சிறப்புடன்

திருநாட்டுச் சிறப்பு

“கறை நிறுத்திய கந்தர சுந்தரக் கடவுள்” என்று தொடங்கும் 32 ஆவது பாடல் முதற்கொண்டு, “நாயகி, பரஞ்சுடர், சேய் என மூன்று தலைவரால் முறை செய்த நாடு இது” என்று தொடங்கும் 91 ஆவது பாடல்வரை உள்ள 60 பாடல்களில் பாண்டிய நாட்டின் சிறப்பைப் பரஞ் சோதி முனிவர் பாடியுள்ளார். சங்கம் வைத்துத் தமிழாய்ந்த சிறப்பு மதுரைக்கு மட்டுமே உரியது. வேறொரு மொழிக்கோ, வேறொரு ஊருக்கோ இது போன்ற சிறப்பு கிடையாது. எந்நாட்டவர்க்கும் இறைவனான சிவபெருமான் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களும் பாண்டிநாட்டிற்கே உரியன.

முத்தமிழும் சிறந்து விளங்குகின்ற திருவாலவாய் மதில்

Koviloor Digital Library

விளங்குகின்றன என்பதைப் பரஞ்சோதி முனிவர் பாடியுள்ளார்.

பாண்டிநாட்டில் உள்ள பொதியமலையின் சிறப்பு, பொருநை

ஆற்றின் சிறப்பு, நால்வகை நிலங்களின் சிறப்பு, உழவன் உழத்தியர் சிறப்பு, சிவனடியார்களின் சிறப்பு, தமிழ்நாடாகிய பெண்ணுக்கு அவையங்கள்போன்று ஆங்காங்கே உள்ள ஊர்கள் விளங்குகின்றன. பொன்னால் ஆகிய ஆபரணங்கள் போன்றுகோயில்கள் திகழ்கின்றன. கோயில்களின் வேறு வடிவங்களாகத் தருமசத்திரங்களும், திருமடங்களும், தண்ணீர்ப்பந்தல்களும், அன்னசத்திரங்களும் பாண்டிநாட்டிற்கு அணி சேர்க்கின்றன.

கறை நிறுத்திய கடவுள்

நஞ்சைக் கண்டத்தில் நிறுத்தி உலக உயிர்களை எல்லாவற்றையும் காத்தருளினார் சிவபெருமான். அதுபோன்று உறையில் நிறுத்தி வைக்கப்பட்ட வாளின் ஒளியால், பகையாகிய இருள் ஒழிந்தது. வேதங்களிற் கூறப்பட்ட நீதிமுறையைநிலைநிறுத்தி ஆண்டருளிய சிறப்புடையது பாண்டித்திருநாடு.

சிவபெருமான் நஞ்சுண்ட நிகழ்வினை, "கறைமிடற்று அண்ணல்", "மணிமிடற்றோன்", "நீலமணிமிடற்று ஒருவன்". "மணிமிடற்று அண்ணல்", "கடும் கூளி, மாறாப் போர் மணி மிடற்று எண் கையாய்","கணிச்சியோன் மணிமிடறு", "மணிமிடற்று மலர்க் கொன்றையவன்" எனச் சங்கத்தமிழ் இலக்கியங்களான புறநானூறு, பரிபாடல், கலித்தொகை ஆகியன போற்றுகின்றன. இவ்வாறான சிறப்புடைய சோமசுந்தரக்கடவுள்பாண்டிய வேந்தனாகி மதுரை ஆட்சி செய்த சிறப்பு உடையது பாண்டியநாடு.

கடலில் நீரை உண்டு,அதிலிருக்கும் உப்பை நீக்கிய மேகம் நன்னீரைப் பொழிகின்றது. இந்த மழைநீரானது மண்ணுலகத்தார்க்கும்

Koviloor Digital Library

விண்ணுலகத்தார்க்கும் அமிழ்தம் ஆகும். கடலின் நீர் ஒன்றே ஆகும். அதுவே மழைநீராக மாறி ஆறு, கால், குளம், கிணறு, குண்டு அகழ், கிடங்கு என்று நீர் நிறைந்துள்ளது. மழைத் தண்ணீரே எல்லாத் தாவரங்களையும் மிருகங்களையும் வளர்க்கலாயிற்று.இது போன்று, என்றும் அழிவில்லாத சிவபெருமான் தானே வெவ்வேறு திருநாமங்களுடன் எல்லாத் தொழில்களையும் செய்கின்றார்.

அமுதமும் ஆலகால நஞ்சும்

அமிழ்தம் வேண்டித் தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைந்தனர். ஆனால் அமிழ்தம் வெளிவருதற்கு முன்பாக, முதலில் ஆலகால நஞ்சு வெளிவந்தது. இந்தக் கொடிய நஞ்சு, தேவர் அசுரர் உள்ளிட்ட உலக உயிர்கள் அனைத்தையும் அழிக்க வல்லது. ஆனாலும்

நஞ்சை ஏற்று உண்டார் ...மான். ஆலகால நஞ்சை ...ல் விட்டால் உலக உயிர்கள் ... அழிந்துவிடும், உடலுக்குள் ...ல் சிவனே ஆனாலும் மரணம் ... இதை உணர்ந்த உமாதேவி ...னின் தொண்டையைப் ... நஞ்சு உள்ளே செல்லாமல் ...விட்டார். நஞ்சு உள்ளேயும் ...ல் வெளியேயும் வராமல் கண்டத்திலேயே நின்றுவிட்டது. இதனால் நஞ்சு உண்ட கண்டனாகிக், கண்டங் கறுத்தவரானார் சிவபெருமான். தேவர் அசுரர் உள்ளிட்ட உலக உயிர்கள் எல்லாமும் காப்பாற்றப்பட்டன.

நஞ்சினால் உண்டான நன்மை மனிதர்களின் தொண்டையில் உள்ளது குரல்வளை. இதிலிருந்து வெளிவருவது பேச்சு. ஒருவர் பேசும்போது, நஞ்சு போன்று கெடுதல் விளைவிக்கும் சொற்களை வெளியில் விட்டால் அவை கேட்போரைக் கெடுக்கும். எனவே தீய சொற்களை வெளிவிடாமல் தொண்டையில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அது அனைவருக்கும் நன்மை பயக்கும். குப்பையைப் புதைத்து வைத்தால் உரமாக மாறிச் சிறந்த பலனை அளிக்கும். அதுபோன்று, தீய சொற்களை

Koviloor Digital Library

வெளிவிடாமல் தொண்டையுடன் நிறுத்திக் கொண்டால் சிறந்த பலனை அளிக்கும், 'எதையும் வைக்க வேண்டிய இடத்தில் வைத்தால் நன்மை பயக்கும்' என்பதை உணர்த்தும் வகையில் உள்ளது இறைவனின் நஞ்சுண்ட தன்மை.

பொதியமலையின் சிறப்பு

பாண்டியநாட்டில் மேகங்கள், அகத்தியமுனிவருடையஉயர்ந்த பொதியின்மலையின் உச்சியில் முழங்கிக் குமுறி மழையைப் பொழிந்தன. இது எப்படி இருந்தது என்றால், பெரிய கோதண்டம் என்னும் வில்லையுடையவர் இராமபிரான். இவர், திருவாலவாயில் வீற்றிருக்கும் நெற்றிக் கண்ணையுடைய இறைவனது திருமுடிமேல் தூய்மையான நீரால் திருமஞ்சனம் செய்தலைப் போன்று இருந்தது. சந்தனமரங்கள் பொதிகைமலையில் உண்டாகின்றன; பொதிகைமலையில் இருந்து வருகின்ற பொருநை ஆற்றில் முத்துக்கள் உண்டாகின்றன; அந்தப் பொருநை ஆற்றால் சூழப்பெற்ற நகரங்களிலே அறங்கள் உண்டாகின்றன; வேத முதல்வனாகிய சிவபிரான் திருவடிகளைப் போற்றும் பக்திநெறி அந்த நகரங்களில் வசிக்கும் மக்களிடம் உண்டாகின்றன. இவ்வாறு பொதியமலையின் காரணமாகச் சைவநெறி பிறந்து வளர்ந்து வாழும் சிறப்புடையது பாண்டிநாடு.

சங்கத் தமிழின் சிறப்பு

நஞ்சினால் அழகு பெற்ற திருமிடற்றை உடைய இறைவன் தென்திசை பார்த்து ஆடுகிறார். ஆடலினால் இறைவனுக்கு உண்டாகும் அலுப்புத் தீருமாறு, சந்தனச் சோலையில் வழியாகத் தென்றல்காற்று வீசுகிறது. பெருமை பொருந்திய பொதியமலையில் இருந்த அகத்திய முனிவனுக்கு, தமிழ் இலக்கணத்தைச் சிவபெருமான் அறிவுறுத்தினார். முதற் கடவுளாகிய சிவபெருமானும், தமிழ்ச் சங்கத்தில் வீற்றிருந்து, செப்பமுற, ஆராய்ந்த சிறப்புடையது தமிழ்.

அடியார்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானைத் தூது அனுப்பியதும், முதலை விழுங்கிய சிறுவனை மீண்டும் உயிருடன் வரவழைத்ததும், எலும்பைப் பெண்வடிவாக உயிர்ப்பித்ததும், வேதத்தினாலே அடைக்கப்பட்ட கதவைத் திறந்ததும், அழியாத தமிழ் மொழியாகும்.

பொருநை நதியின் சிறப்பு

பெருமழை பெய்து குளிர்ந்தது பொதியமலை. பொதியமலை என்ற பெண்ணின் மீது மழை பொழிந்த காரணத்தால்

Koviloor Digital Library

எடுத்து வீசி நல்ல கஸ்தூரியும் சந்தனமும் பூசி வாசம் பொருந்திய புஷ்பங்களைத் தூவிக்கொண்டு செல்கிறது.

உண்மைக் கடவுளை அறியாதவர் புத்தி கலங்கி அல்லல் படுகின்றனர். பின்னர் நீலமணி போன்ற கண்டத்தையுடைய சிவபெருமானே எங்கும் நிறைந்த பரம்பொருள் என்றும், பூதிசாதன நெறியே முத்தி அளிக்கும் என்று தெளிவடைகின்றனர். வேதத்தின் வழியே உண்டாகிப் பிரிந்த அறுபத்துநான்கு கலைஞானங்கள் போல துறைகளெல்லாம் ஓடி வெள்ளியம்பலவாணரின் அடியார்கள் தெளிவு பெற்று, இகபர ஆசைகளைத் துரந்து, தெளிவு அடைகின்றனர். அதுபோன்று, தாமிரபரணி ஆற்று வெள்ளம் கலங்கி ஓடிப் பின்னர் தெளிகின்றனது.

அவளுக்குத் தாமிரபரணி என்ற ஆற்றை மகளாகப் பெற்றாள். தாமிரபரணி என்ற பெண்பிள்ளை முல்லைநிலத்திலே ஒல்லென்று தவழ்ந்து மெதுவாகக் காலின்வழி ஓடிச் சென்று மருத நிலங்களில் எல்லாம் விளையாடுகின்றாள். பொதியமலைச் சந்தனத்தையும் கஸ்தூரிச்சேறும் பூசி, பொன்னும் மணியும் முத்தும் பூண்டு, பொருநையாகிய பெண்நதியானது தனது மகிழ்வுக்குரிய கடலின் மார்பைத் தழுவிக்கொண்டு கூடியது.

இவ்வாறான சிறப்புகளையுடைய பொருநை நதியானது சிவனடியார்கள் போன்று, இருகரையிலும் விரைவிலே தாவிச் சென்று அங்குள்ள சிவாலயங்களுக்குச் செல்கின்றது. முல்லைநிலத்திலுள்ள பஞ்சகௌவியத்தையும் தேனையும் அலையாகிய தனது கையினாலே

வணிகச் சிறப்பு

மூன்று பக்கமும் கடல்நீர் வேலியாகச் சூழ்ந்துள்ள இந்தப் பாண்டிநாடு. இதன் நிலமானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு பிரிவுகளாக உள்ளது. துள்ளுகின்ற மீன் போன்ற கண்களையுடைய

Koviloor Digital Library

வலையர்குல மகளிர் சுறாமீனுடன் சேர்த்துச் சாப்பிடுவதற்காகக் கள் வாங்குகின்றனர். புளியங்காய் தினை அவரை கொள் கிழங்கு தேன் கரும்புக்கட்டி எள் முதலானவற்றை பண்டமாற்றாகக் கொடுத்தும் வாங்கியும் செல்கின்றனர். கரும்பு, எள்ளு, சாமை, கொள், சோளம், தாமரை, வாழைக் குலை, அவரை, தினை, பலவகைப் பயறுகள் முதலானவற்றை எல்லாம் பொதிமாடுகளிலும் வண்டிகளிலும் ஏற்றிச் செல்கின்றனர்.

உழவன் உழத்தியரின் சிறப்பு

காமநூலில் வகைப்படுத்தப்பட்டுள்ள சொல்லுகின்ற நான்கு வகைப் பெண்களின் குணங்களையும் பக்குவங்களையும் தெரிந்து அவர்களுடன் கூடி, காமசுகத்தைப் பெறுகின்றனர். அது போன்று, நிலங்களின் நான்கு வகையான வேறுபாடுகளையும், பருவ காலங்களையும் அறிந்து உழவுத் தொழில் செய்கின்றனர். மள்ளர்கள் பலதிறமான ரத்தினங்களைக் கோத்தாற் போலப் பல நிறங்களையுடைய மாடுகளைக் கட்டிய ஏர்களால் உழுகின்றனர். தெய்வத்தை வணங்கி நல்ல செந்நெல்களை விதைத்து நாற்றாகச் செய்து, அதைப் பிடுங்கி வயல்களில் நடுகின்றனர். நாள்தோறும் பயிர்களைக் காக்கின்றனர். கழனிகளில் விளைந்த நெற்பயிர்களை, வளைந்த அரிவாளைக் கொண்டு அரிந்து நெல்லைக் குவிக்கின்றனர். ஊர்த் தெய்வத்துக்கும் அநாதிகளுக்கும் தக்கபடியே செலவு செய்கின்றனர். பின்பு அளந்து கணக்குப் பார்த்து ‘ஆறில் ஒரு பங்கை அரசர்க்கு வரி‘ யாகக் கொடுக்கின்றனர். மற்ற ஐந்து பங்கையும் வண்டியில் ஏற்றிக் கொண்டுபோய் தென்புலத்தார் குலதெய்வம் விருந்து ஒக்கல் என்ற நால்வரும் உண்ணக் கொடுத்துத் தாமும் உண்கின்றனர்.

சிவனடியார் சிறப்பு

அன்பால் மிகுந்த பத்தியை விதைத்து மகிழ்ச்சி என்ற நீரைப் பாய்ச்சுகின்றனர் சிவனடியார்கள். அவர்களுக்கு ஆனந்தவடிவான சிவபெருமானின் திருவருள் என்னும் விளைச்சல் கிடைக்கிறது. சில காலங்களில் அதுவும் குன்றிவிடுகிறது. காலநிலை மாற்றத்தால் உணவுப் பஞ்சம் வந்தபோதும், அரசர் செங்கோல் நடுவுநிலைமை மாறியதால் அருளாட்சி குன்றியபோதும், வறுமை யினால் பிணி வருத்தினாலும், சிவபிரானிடத்து மெய்யான அன்பும், சைவ நெறியும் குன்றாமல் விளங்குகின்றனர். அடியார்கள் தங்களை விற்றாயினும், அறம்

Koviloor Digital Library

செய்கின்றனர். இவ்வாறான சிறப்புடைய பாண்டிநாடு.

பாண்டிய நாட்டு மக்கள் துறந்தார்களை வாழ்விக்கின்றனர். அவர்களின் குளிர் நீங்கக் கெட்டியான உடைகளையும், இருக்க இடமும், முக்கனிகளும், தேன் கலந்த பாலுடனே புழுங்கல் அரிசியாலே நிரம்பின சோற்றையும் வழங்குகின்றனர். இன்னம் வேண்டியவையும் கொடுத்து, தருமத்துக்கு வரும் கேடுகளைப் போக்கி, இன்சொற்கள் சொல்லி, அவர்கள் மனக் குறிப்பு அறிந்து பணிவிடை செய்கின்றனர் மக்கள். இதையல்லாமல் அந்தப் பாண்டிநாட்டின் பெருமையை எப்படிச் சொல்லி முடிக்க முடியும் !

செங்கோல் சிறப்பு

உலகங்கள் எல்லாவற்றையும் ஈன்று அருளிச் செய்து, சக்திகளுள் உயர்ந்த திலகம் போன்றவள் உமாதேவி. சோதி வடிவானவர் பரமசிவன். இவர்களது புதல்வன் முருகப்பெருமான். இந்த மூன்று முதல்வர்களாலும் செங்கோல் ஓச்சி ஆளப்பட்ட சிறப்புடையது பாண்டிநாடு. கடலால் சூழப்பட்ட இந்தப் பூமியில் இந்தப் பெருமையானது வேறு எந்தவொரு நாட்டிற்காவது உள்ளதோ ! !

பாண்டித் திருநாட்டுப் படலம் முற்றிற்று. அடுத்து வரும் இதழில் மதுரைத் திருநகரப் படலம் காண்போம்.

கைகாட்டியானது நாம் போகும் ஊருக்குச் செல்லும் வழியைக் காட்டுகிறது. கைகாட்டி ஊர் ஆகிவிடாது. அதுபோன்று, இதுபோன்ற கட்டுரைகள் மூலப்பாடல்கள் ஆகமாட்டா. பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தின் மூலப் பாடல்களைக் கற்பதன் வழியே முத்தி அளிக்கும் பரம்பொருளின் திருவிளையாடல்களை கற்று உணர வேண்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ! ! !

Koviloor Digital Library

தினசரி வாழ்க்கைக்குத் திருப்புகழ் - 4

கொன்ற பாவம் தின்றால் போகுமா ? திருப்புகழில் விடை



டாக்டர் ஜெயபாலன் வள்ளியப்பன், ஈப்போ, மலேசியா

ஒரு காலத்தில் புலால் உண்பது மிகக் குறைவாக இருந்தது. புலால் உண்ணும் பழக்கம் உள்ளவர்கள் கூட வாரத்தில் ஒரு நாள், மாதம் ஒரு நாள் என்று, குறிப்பிட்ட சில நாட்களில் தான் அசைவம் சமைத்து உண்பார்கள். ஆனால் இன்று பல விருந்து நிகழ்ச்சிகளில், சைவ உணவு உண்பவர்களை, என்ன நீங்கள் தாவரம் சாப்பிடுபவரா? அசைவம் சாப்பிடாமல் எப்படி இருக்கின்றீர்கள்? என்று பரிதாபமாகப் பார்க்கிறார்கள்.

எல்லா வகையான மாமிச உணவுகளிலும் , பல வகையில்

சுவைகளைக் கூட்டி, அதன் மாமிச வாடையைப் போக்கி எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும் உண்ணுகின்ற நிலைமையைப் பார்க்கிறோம் .

அரேபியப் பாலைவனங்களிலும் பச்சை தாவரங்களே இல்லாத ஐரோப்பா போன்ற குளிர் பிரதேசங்களிலும் உருவான சமய நம்பிக்கைகள் வேண்டுமானால் வேறு உணவே இல்லாத நிலையில் புலால் உண்பதை ஆதரிக்கலாம். ஆனால், இந்திய மண்ணில்

Koviloor Digital Library

தோன்றிய சனாதன தர்ம வாழ்க்கை முறையில் புலால் உ ண வு க் கு இடமில்லை.

எ ல் ல ா உயிர்களுக்கும் வாழும் உரிமை உண்டு. உணவிற்காக ஓர் உயிரைக் கொல்வது பாவமாகும், என்ற கருத்தை உடையது இந்துமதம்

தன்னுடைய உடம்பைப் பெருக்கச் செய்வதற்கு மற்றொரு உயிரைக் கொன்று அதன் உடம்பை உண்பவன், எப்படி பிற உயிர்களிடத்தில் அருளுடன் இருப்பான்? என்று கேட்கின்றார் இந்தச் சனாதன மண்ணில் பிறந்த திருவள்ளுவர் .

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்

எங்ஙனம் ஆளும் அருள் குறள்:251

ஊனைத் தின்று ஊனை வளர்ப்பவன் இறந்த பிறகு என்ன ஆவான் என்று திருமூலர் சொல்லுகின்றார் .

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை

எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்

செல்லாகப் பற்றியத் தீவாய் நரகத்தில்

மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே. திருமூலர் திருமந்திரம்

ஐந்தறிவுள்ள உயிரினங்கள் பரிதாபமாகக் கதற , அவற்றின் உயிரைப் போக்கி அந்த உடலை உண்பவர்களை, பொல்லா புலாலை நுகரும்புலையர், இன்று விளிக்கிறார். இவர்கள் இறந்தபின் தாங்க முடியாத நரக வேதனைப்படுவார்கள் என்று எச்சரிக்கிறார்.

ஆறு விதமான தகாத செய்கைகள்

அருணகிரிநாதர் ஆறு விதமான தகாதச் செய்கைகளை “அனிச்சம்

Koviloor Digital Library

கார்முகம்வீசிட" என்றதிருச்செந்தூர் திருப்புகழில் பட்டியலிடுகின்றார். அதில், முக்கியமானதாக அவர் குறிப்பிடுவது பிற உயிரினங்களின் துன்பத்தின் மூலம் விளைந்த மாமிசத்தை ஆசையுடன் சுவைத்து உண்பது. இந்தச் செயலை, தன்மீது ஏற்றிக் கொண்டு அவர் பாடுகிறார்.

அனிச்சங் கார்முகம் வீசிட மாசறு

துவட்பஞ் சானத டாகம்வி டாமட

அனத்தின் தூவிகு லாவிய சீறடி ...... மடமானார்

அருக்கன் போலொளி வீசிய மாமர

கதப்பைம் பூணணி வார்முலை மேல்முகம்

அழுத்தும் பாவியை யாவியி டேறிட ...... நெறிபாரா

வினைச்சண் டாளனை வீணனை நீணிதி

தனைக்கண் டானவ மானநிர் மூடனை

விடக்கன் பாய்நுகர் பாழனை யோர்மொழி ...... பகராதே

விகற்பங் கூறிடு மோகவி காரனை

அறத்தின் பாலொழு காதமு தேவியை

விளித்துன் பாதுகை நீதர நானருள்.....பெறுவேனோ

ஞ்ஞ்ஞ்

திருச்செந்தூர் 0029. அனிச்சம் கார்முகம்.

இந்தத் திருச்செந்தூர் திருப்புகழில் அருணகிரிநாதர் ஆறு தகாத செயல்களை ஒரு மனிதன் தன்னுடைய தினசரி வாழ்க்கையில் செய்யக் கூடாது என்று சொல்கின்றார்.

அதில் முதலாவது, விலைமாதர் மயக்கம். இது அவருடைய காலத்தில், ஒரு சமூக சீர்கேடாக இருந்தது . ஆதலால், பல பாடல்களில் இந்தத் தகாத ஆசையைக் கண்டிக்கின்றார். " விலைமாதர்களின் முலைகளின் மேல் வீழ்ந்து கிடக்கும் பாவி" என்று தன்னைத்தானே சொல்லிக் கொள்கிறார்.

அடுத்து , "ஆவி இடேறிட நெறி பாரா வினைச் சண்டாளனை" என்று தீ நெறிகளில் சென்று பிறந்த

Koviloor Digital Library

பயனை அடையாத சண்டாளன் என்று தன்னைத்தானே சொல்லிக் கொள்கின்றார். இங்கே சண்டாளன் என்பது ஒரு குலமல்ல.

பிரம ஞானம் அணர்ந்தவன் பிராமணன்; அழகிய தணிந்த சிந்தையுடையவன் அந்தணன்; வேதமோதுபவன் வேதியன்; இந்திரியங்களுடன் போராடி அவற்றை வென்று பொறி புலன்களை அடக்கியாள்பவன் அரசன்;

புண்ணியப் பாவங்களை நிறுத்து வாணிபஞ் செய்பவன் வைசியன்; புலன்களுக்கு அடிமைப்பட்டவன் சூத்திரன்; பறை வாத்தியத்தை வாசிப்பவன் பறையன்; புலால் உண்பவன் புலையன்; சண்டாளத்துவம் உடையவன் சண்டாளன் எனப் பிரித்து உணர்தல் வேண்டும்.

மூன்றாவதாக அவர் சொல்லும் தகாத செயல் செல்வச் செருக்கினால் வரக்கூடிய ஆணவம். நிறைந்த செல்வத்தை உடைய காரணத்தினால் ஆணவம் கொண்ட மூடனாகத் தன்னைச் சொல்லிக் கொள்கிறார் .

நான்காவது குற்றம் மாமிசம் உண்பது. விடக்கு என்று சொல்லக்கூடிய மாமிசத்தை ஆசையோடு உண்கின்ற பாழானவனை, என்று மாமிசம் உண்பதை சாடுகின்றார்.

ஐந்தாவது மூல மந்திரத்தைச் சொல்லாத குற்றம் . ஒப்பற்ற சரவணபவ என்ற சடாக்ஷர மந்திரத்தைச் சொல்லாமல், சாத்திரத்திலிருந்து மாறுபட்ட பேச்சுக்களையே பேசுகின்ற காமவிகாரன் என்றும், ஆறாவது குற்றமாக அறவழியில் செல்லாதது என்று குறிப்பிட்டு தர்ம வழியில் செல்லாத மூதேவி என்று தன்னையே நொந்து கொள்கிறார்.

இந்த ஆறு பாவங்களையும் செய்த தன்னுடைய செயல்களைப் பொறுத்து முருகப்பெருமான், அவரையும் ஒருவனாக்கி அவனுடைய பாதுகைகளை அவர்மேல் சூட்டிக் கொள்ளும் திருவருளைப் பெறுவேனோ? என்று வேண்டுகிறார் . இந்தக் கருத்தையே பட்டினத்தாரும் எதிரொலிக்கின்றார் .

கொல்லாமல் கொன்றதை தின்னாமல் சூத்திரம் கோள்களவு
கல்லாமல் கைதவரோடு இனங்காமல் கனவிலும் பொய்
சொல்லாமல் சொற்களை கேளாமல் தோகையர் மாயையிலே

Koviloor Digital Library

செல்லாமல் செல்வம் தருவாய் சிதம்பர தேசிகனே - பட்டினத்தார்.

ஒரு சிலர் , எதை உண்கிறோம் என்பது எங்களுடைய உரிமை . அதில் தலையிட எவருக்கும் எந்த உரிமையும் இல்லை என்பார்கள். ஆனால் அசைவம் என்பது உணவல்ல உயிர். அவர்கள் எதை உண்கின்றோம் என்பது வேண்டுமென்றால் அவர்களுடைய தனிப்பட்ட உரிமையாக இருக்கலாம். ஆனால் யாரை உண்பது என்பது தனிமனித விருப்பமாக ஒருபொழுதும் இருக்க முடியாது. பிற உயிர்களை எடுக்கும் உரிமையும் யாருக்கும் இல்லை என்ற கருத்தை நம்முடைய ஆன்மீக நூல்கள் வலியுறுத்துகின்றன .

கொன்றால் பாவம் தின்றால் போகுமா ?

கொன்றால் பாவம் தின்றால் போகும் என்று ஒரு பழமொழியைச் சொல்லிவிட்டு, மாமிசம் சாப்பிடுவதைப் பலர் நியாயப்படுத்துவார்கள். இதற்கான பதிலும் திருப்புகழில் உண்டு .

“புவனத்தொரு” என்று துவங்கும் திருச்சிராப்பள்ளி திருப்புகழில் , ஒவ்வொரு மானிடனும் செய்த பாவத்திற்கு ஏற்ப , இறந்த பிறகு, அவனுக்கு நரகத்தில் என்னென்ன தண்டனைகள் கிடைக்கும் என்று கூறுகிறார்.

அதில், சிற்றுயிர்களைக் கொன்று தின்ற பாவிகளை எமதூதர்கள் நிறுத்திவைத்து கூரிய வாளால் உடலையும் தசையையும் துண்டுத் துண்டாக அறுத்து, அதை வாயில் திணித்து , சாப்பிடு என்று இன்று தண்டிப்பார்கள் .

“ கொன்றால் பாவம் தின்றால் போயிற்று” என்ற பழமொழி இதனால் தான் ஏற்பட்டது என்று தவத்திரு கிருபானந்தவாரியார் சுவாமிகள் கூறுவார்கள். ஆம், பிற உயிரைக் கொன்ற பாவம், தங்கள் உடம்பைத் தாங்களே தின்றால் தீரும், என்ற காரணத்தினால் கொன்றால் பாவம் தின்றால் போயிற்று என்ற பழமொழியும் தோன்றியது .

Koviloor Digital Library

நிறைவுரை

அன்றாட வாழ்க்கையில், புலால் உண்பதைத் தவிர்க்க வேண்டும் என்பது அருணகிரிநாதர் காட்டிய வழி . அருணகிரிநாதர் காட்டிய அறநெறியின் வழி நிற்றலே , அவருக்கு நாம் செய்யும் கைம்மாறாகும். திருப்புகழை உணர்ந்து படிக்கும் பொழுது, முருகனே உங்கள் உள்ளத்தில் எழுந்தருளி, இந்த உண்மைகளை உணர்த்துவான். திருப்புகழ் படிக்க, படிக்க ஆழ்மனதில் அருள் உணர்ச்சி ஆறாகப் பெருகும். அருளும், அன்பும் உடைய அன்பர்கள் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்ய நினைக்க மாட்டார்கள்.

நல்வழி பாடல்கள்

பாடல் 39

முப்பது ஆண்டிற்குள் முதல்வனை யறி
முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்று ஒருபொருளைத்
தப்பாமல் தன்னுள் பெறானா யின்செப்புங்
கலையளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்
முலையளவே ஆகுமாம் மூப்பு.

விளக்கம்:

ஒருவன் எத்தனை தான் கல்வி கற்றாலும், அவனது முப்பது வயதிற்குள் ஆணவம், கண்மம், மாயை என்ற மும் மலங்களை கடந்து இறைவனை உணராமல் இருந்தால், அவன் கற்ற கல்வி வயதான பெண்களுக்கு உள்ள மார்பகங்கள் அவள் கணவனுக்கும், அவர்களின் குழந்தைக்கும் பயன் படாமல் வெறும் பெயர் அளவுக்கு இருக்கும் உறுப்பு இருப்பது போல், அவன் கற்ற கல்வி ஒன்றுக்கும் பயன் படாமல் வெறும் கல்வி என்று தான் இருக்கும். அதனால் ஒரு பயனும் இல்லை.

Koviloor Digital Library

நாநா ஜீவவாத கட்டளை வியாக்கியானம்

- நூல் அறிமுகம்

- கு. அன்பு மெய்யப்பன்,
உதவிப் பேராசிரியர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி - 3.

இந்நூல் கோவிலூர் மடத்தின் பாடத்திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மடத்தின் எட்டாம் பட்டம் சீர் வளர் சீர் சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகளின் மாணவரும், சிக்கல் பொருள் வைத்த சேரி கோ.ஆ.பொ. மடத்தின் தலைவருமாகிய சீர் வளர் சீர் சோம. இராமலிங்க சுவாமிகள் என்பவரால், 1983 இல் நாகப்பட்டினம் அருணா அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளி யிடப்பட்டுள்ளது. 27 பக்கங்களைக் கொண்ட சிறிய நூல்.

இந்நூலின் முகவுரையாக இராமலிங்க சுவாமிகள் கூறும்போது, வியாசர் ரிக் முதலிய வேதங்களை பயிற்றுவித்து, உலகின்கண் பரவச் செய்தார். ஜீவ பிரம்ம ஐக்கியத்தை (நமது உடலில் இருவகையான ஆன்மாக்கள் உள்ளன.

1.மனித ஆன்மா என்னும் ஜீவாத்மா.

2. பரமாத்மா என்னும் இறைவன். இவை இரண்டுக்குமான ஒற்றுமை

Koviloor Digital Library

பற்றிப் பேசுவது) விளக்குகின்ற உபநிடதங்களின் சாரமாக 555 பிரம்ம சூத்திரங்களை வியாசர் அருளியுள்ளார். அதனை அடிப்படையாகக் கொண்டு ஆதிசங்கரர், பிரம்ம சூத்திர பாஷியத்தின் மூலம் (பாஷியம் – விளக்கம்) கருத்துக்களை எழுதியுள்ளார். அக்கருத்துக்கள் இயைய இந்த நாநா ஜீவவாத கட்டளைகள் வியாக்கியானம் எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகிறார்.

கட்டளை நூல்கள்

பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் முதலில் படிகின்றவர்களுக்குத் தத்துவக் கருத்துக்களை எளிதில் விளக்கும் நூல்கள் சைவ மடங்களில் இருந்து கட்டளைகள் என்ற பெயருடன் பல வெளிவந்தன. அந்த வகையில் அத்வைதக் கொள்கைகளை விளக்கும் நூல்களில் ஒன்று நாநா ஜீவவாதக் கட்டளையாகும். கட்டளை நூல்களுள் தலைசிறந்தது இது. அத்வைதக் கொள்கைகளைப் படிப்போர் பயிலும் முதல் நூல் இது. கோவிலூர் மடத்தின் பாடத்திட்டத்திலும் இந்நூலே முதல் நூலாகக் கற்பிக்கப்படுகிறது.

முதலில் காப்புச் செய்யுள் பாடல் அமைகிறது. அடுத்ததாக மும்மூர்த்திகள் வணக்கம் விருத்தமாக அமைகிறது. ஆண்டவரின் குரு சீர் வளர் சீர் உகந்தலிங்க ஞானதேசிகர், கோவிலூர் ஆண்டவர், எட்டாம் பட்டம் சீர் வளர் சீர் சோமசுந்தர ஞானதேசிகர் ஆகியோரைப் பற்றிய பாடல்களாக அமைகிறது. இதனை திருநீலகண்ட சண்முகானந்த சுவாமிகள் என்பார் இயற்றியுள்ளார்.

அவதாரிகை என்னும் தலைப்பில் அமைந்த முன்னுரை, உலகில் காணப்படும் மந்தன், மந்ததரன், தீவிரன், தீவரதரன் என்று காணப்படுகின்ற சகல அதிகாரிகளும் எளிதில் ஆனந்தமாகக் கற்பதற்கு இந்நூல் உருவாக்கப்பட்டதாகக் கூறுகிறது.

பெயர்க்காரணம்

இந்நூலுக்கு ஏன் நாநா ஜீவ வாதக் கட்டளை என்ற பெயர் ஏற்பட்டது என்பதை விளக்கும் போது, கர்த்தா(செயலைச் செய்பவர்), போக்தா (செயலின் விளைவை அனுபவிப்பவர்), ஞாதா (செயலின்

Koviloor Digital Library

தன்மையையும் அது பற்றிய அறிவையும் கொண்டவர்) இம் மூன்று இயல்புகளையும்கொண்ட பல ஜீவன்கள் இவ்வுலகில் உள்ளன. அகத்தா(செயலைச் செய்தாதவர்), அபோக்தா (செயலின் விளைவை அனுபவிக்காதவர்), அசங்கம் (உலகப் பொருள்கிளன் மீதோ உறவுகளின் மீதோ பற்றில்லாவர்) மற்றும் சின்மத்திரன் என்பவர்களின் வழி விவாதித்து, உலகம் முழுதும் நிறைந்திருக்கும் பிரம்மத்தை விளக்குவதால் இதற்கு நாநா ஜீவவாதக் கட்டளை என்று பெயர்.

பிரம்மம் (எல்லாமுமான மூலப் பொருள்), நித்தம்(எப்போதும் நிலையாக இருக்கும் பொருள்), அசுத்தங்கள் (1. ஜீவன் அசுத்தம், 2. ஈசுவரன் அசுத்தம், 3. மாயை அசுத்தம், 4. அவித்தை அசுத்தம், 5. நவதுவாரங்களால் ஸ்தூல சரீர அசுத்தம், 6. சூக்கும சரீர அசுத்தம், 7. பிருதிவி (உடல்) அசுத்தம், 8. அப்பு (நீர்) அசுத்தம், 9. அக்னி அசுத்தம், 9. வாயு அசுத்தம், 10. ஆகாச அசுத்தம், 11. ஞானரூப அசுத்தம்) புத்தம், முத்தம்,சத்தியம், பரமானந்தம் ஆகியவை பற்றி விரித்துரைக்கிறது.

மேலும், பஞ்ச கோசங்களான

1. அன்னமய கோசத்தின் சொரூபம்,

2. பிராண மய கோசத்தின் சொரூபம்,

3. மனோமய கோசத்தின் சொரூபம்,

4. விஞ்ஞானமய கோசத்தின் சொரூபம்,

5. ஆனந்த மய கோசத்தின் சொரூபம் பற்றியும் மிக விரிவாக விளக்குகிறது.

இதன் மூலம் பிரம்மத்தின் தன்மை, ஜீவன்களின் தோற்றம்,அவற்றின் தன்மை ஆகியவற்றை விளக்குகிறது. இறுதியாக இதன் மூலம் அறிவது, பிரம்மம் ஒன்றே உண்மையானது. ஜீவன்களான அனைத்தும் அதனிடத்தில் கற்பனையாகத் தோன்றியதே என்பதை விளக்குகிறது.

Koviloor Digital Library

காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம் - பாடல் 27

- வாகீச கலாநிதி
கி.வா. ஜகந்நாதன்

பாம்பை அணையாதே

காரைக்கால் அம்மையாருடைய உள்ளத்தில் தாய் அன்பு சுரக்கிறது. இறைவன் அவரை,'அம்மையே!" என்று அழைத்தான். இவர் நம்மைப் பேணும் அன்னை" என்று உமாதேவியாரிடம் சென்றான். அவரிடம் அன்னைக்குரிய பண்பு இருப்பதனால்தான் அப்படிச் சென்றான்.

ஒரு குழந்தை கண்டதைத் தின்றால் அதன் தாய் தடுப்பாள்; "உன்உடம்புக்கு ஆகாது" என்று கூறுவாள். கத்தியை எடுத்தால், "எடுக்காதே; கையில் காயம் பட்டுக் கொள்வாய்" என்று எச்சரிப்பாள்; அதை அவன் கையிலிருந்து வாங்கிவிட முயல்வாள்.

இத்தகைய மனோபாவத்தோடு அம்மையார் பேசுகிறார். வாத்ஸல்ய பாவத்தோடு, குழந்தையிடம் தாய்க்கு உள்ள தூய அன்போடு பேசுகிறார்.

சிவபெருமான் தன் திருமேனியில் அரவங்களையே அணிகலனாகப் பூண்டிருக்கிறான். அவை அவனை ஒன்றும் செய்யா, ஆனால் தாயுள்ளத்துக்கு அவற்றைக் கண்டால் பயமாக இருக்கிறது.

பட்டாசைக் கையில் வைத்துப் பொருத்தி எறியும் குழந்தையைக் கண்டு கலவரப்பட்டு, போட்டு விடடா! போட்டுவிடடா!" என்று அலறும் தாய்மார்களை நாம் கண்டிருக்கிறோம். அந்தப் பையன் சிறிதும் அச்சமின்றி அதைப் பிடித்திருப்பான். அவன் சிறிதும் கலவரம் அடைவதில்லை. ஆனால் தாய்க்கோ நெஞ்சு படக்குப் படக்கு என்று அடித்துக் கொள்ளும். உண்மையில் பையனுக்கு

Koviloor Digital Library

ஊ ர் ந் தி டு மா
காகம் ஒருநாள்
மலைமகளைச்

சா ர் ந் தி டு மே ல்
ஏபாவந் தான்.

என்று 13ஆம் பாட்டில் சொன்னார். 22ஆம் பாட்டில், "வாளரவு பிறையை விழுங்கிவிடும். அதன் சிந்தையைத் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று எச்சரித்தார். இப்படிச் சொல்லியும் அவன் அந்த நாகாபரணத்தை விடவில்லை. 'பல நாள் உன்னைப் புகழ்ந்து வணங்கி, இந்த நாகப் பாம்பு வேண்டாம் என்று சொன்னேனே! அது உன் காதில் ஏறவில்லையா? முதலில் ஊராரைப் பார்த்துச் சொன்னேன். யாராவது அதைக் கேட்டு உன்னைத் தடுப்பார்கள் என்று எண்ணினேன். யாரும் ஏதும் செய்யவில்லை. பிறகு உன்னைப் பார்த்தே சொன்னேன். உனக்கு ஆபத்து வருமென்று சொல்ல வேண்டாமென்று, நயமாக, உன் தலையில் அணிந்த பிறைக்கு ஆபத்து வரும் என்று சொன்னேன். குறிப்பை அறிந்து நீக்கிவிடுவாய் என்று எண்ணினேன். நீயோ விட்டபாடில்லை. பலகால் சொல்லியும், பலநாள் சொல்லியும், கெஞ்சிக் கேட்டு இது வேண்டாம் என்று சொல்லியும் நீ கவனிக்க வில்லை. மறுபடியும்,

ஒன்றும்நேராது. அவனுக்குத் தெரியும், எந்த நேரத்தில் அதை எறிய வேண்டுமென்று. ஆனால் தாய் அதையெல்லாம் எண்ண மாட்டாள். பட்டாசு கையிலே வெடித்து விட்டால் கையில் தீப்புண் உண்டாகிவிடுமே என்று அவள் அஞ்சி நடுங்குவாள்.

அந்த நிலையில் நின்று பேசுகிறார் காரைக்காலம்மையார், "எம்பெருமானே, இந்தப் பாம்பை நீ பூணக்கூடாது. இதை விட்டுத்தள்ளு. உனக்கு வேறு ஆரமா கிடைக்காது? நல்ல பொன்னாரங்கள் இருக்கின்றனவே! அவற்றில் ஒன்றை அணிந்து கொள்" என்கிறார். அரவைக் கண்டு அஞ்சி முன்பும் இவர் பாடியிருக்கிறார்.

தகவுடையார் தாம் உளரேல்
தார்அகலம் சாரப்

புகவிடுதல் பொல்லாது கண்டீர்;
மிக அடா

Koviloor Digital Library

சொல்கிறேன்.’ இவ்வாறு கருத்து அமைய அம்மையார் சொல்கிறார்.

“நீ ஒரு பாம்பைக்கூட உன் திருமேனியிலே பூணாதே” என்று தொடங்குகிறார்.

அரவம் ஒன்று ஆகத்து நீ நயந்து பூணேல்.

“நீ நயந்து பூணுகிறாய்; நான் பயந்து நடுங்குகிறேன். நான் மட்டுமா சொல்கிறேன்? என்னோடு உள்ள அடியார்களும் சேர்ந்து சொல்கிறார்கள். தொழுது இரந்து பரவிப் பல நாள் சொன்னோம்.”

பரவித் தொழுது இரந்தேம் பன்னாள்,

‘உன்னுடைய பராக்கிரமத்தை நான் நன்கு அறிவேன். பொல்லாத அசுரர்கள் மூன்று புரங்களுக்கு அதிபதியாக இருந்து அந்தப் பறக்கும் கோட்டைகளால் உலகுக்குத் தீங்கு விளைத்தார்கள். அந்த மூன்று புரங்களாலும் மக்களுக்குத் தீங்கு விளையுமே என்று உணர்ந்து அவற்றை அழித்தாய். பிறருக்கு வரும் தீங்குகளே மாற்றத் தெரிந்த உனக்கு உனக்கே வந்திருக்கும் தீங்கை உணர முடியவில்லையே! உனக்காகத் தெரியாவிட்டாலும் நாங்கள் எடுத்துச் சொல்லியும் தெரியவில்லையே! பல நாள் எடுத்துச் சொல்லுகிறோம். இனிமேல் இந்த அணிகலம் வேண்டாம்.”

முரண் அழிய

ஒன்னாதார் மூவெயிலும் ஓரம்பால் எய்தானே!

இறைவன் திரிபுரங்களைச் சிரித்து எரித்தானென்றும், விழித்து எரித்தானென்றும், அம்பெய்து அழித்தான் என்றும் வெவ்வேறு வகையாகச் சொல்வதுண்டு. தேவாரப் பாசுரங்களில் இந்த மூன்று வகையையும் பார்க்கலாம். இவற்றைக் கற்ப பேதங்களில் நிகழ்ந்தவை என்பார்கள். அதாவது ஒவ்வொரு கற்பத்திலும் இறைவன் இத்தகைய திருவிளையாடல்களை மீட்டும் மீட்டும் செய்தருளுகிறான். அப்போது சில சிறிய வேறுபாடுகள் அமையும். அப்படி அமைந்த வேறுபாடுகள் இவை.

‘எனக்கு அணிகலன்களாக உள்ளவை அந்தப் பாம்புகள் அணிகலன்கள் இல்லாமல் வெற்றுடம்பாக இருந்தால் நன்னா யிராதே? என்ற கேள்வியை இறைவன் எழுப்பலாம். அம்மையார் அதை எதிர்பார்த்து யோசனை சொல்கிறார். “எத்தனையோ வகையான ஆரங்கள் இருக்கின்றன. முத்தாரம், மணியாரம், பொன்னாரம் என்று பல வகை உண்டு. நீ விரும்பினால் உனக்குக் கிடைக்காதா? பொன்னாரம் ஒன்றை நீ அணிந்து கொள்வாயாக?’ என்கிறார்.

பொன்னாரம் மற்றொன்று பூண்.

[ஆரம்மாலை. மற்றொன்றுஇந்த நாகம் அல்லாத ஒன்றை.]

Koviloor Digital Library

தாயன்பினால் வாத்ஸல்ய ரசம் தோன்றக் காரைக்காலம்மையார் இந்தப் பாட்டைப் பாடுகிறார்.

அரவம் ஒன்று ஆகத்து நீநயந்து பூணேல்.

பரவித் தொழுதிரந்தேம் பன்னாள்;ஷை முரண் அழிய

ஒன்னாதார் மூஎயிலும் ஓர் அம்பால் எய்தானே;

பொன்னாரம் மற்றொன்று பூண்.

இரும்பு, வெள்ளி, பொன் என்னும் மூன்று உலோகங்களாகிய மதிலைப்பெற்ற மூன்று பறக்கும் கோட்டைகளுக்குத் தலைவராக வித்யுன்மாவி, தாரகாட்சன், வாணன் என்ற மூன்று அசுரர்கள் இருந்தார்கள். அவர்கள் தம் கோட்டைகளைத் திடீரென்று எங்கேனும் இறக்குவார்கள். அவற்றின் கீழ் மக்கள் அகப்பட்டு இறந்து போவார்கள். தேவர்கள் முறை யிட ஆண்டவன் அந்த முப்புரங்களை மட்டும் அழித்தான். அசுரர் மூவரும் அடிபணிய, இருவரைத் தம் வாயில் காவலராகவும், வாணனை முழவு வாசிப்பவனாகவும் இருக்கும்படி அருளினான் ஆண்டவன். இது புராண வரலாறு.

மேலே சொன்னது அற்புதத் திருவந்தாதியில் உள்ள 27ஆம் பாடல்.

நல்வழி பாடல்கள்

பாடல் 40

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்

மூவர் தமிழும் முனிமொழியும் ஞீ கோவை

திருவா சகமும் திருமூலர் சொல்லும்

ஒருவா சகமென் றுணர்.

விளக்கம்:

தெய்வப் புலவர் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளும்,

நான்கு வேதத்தின் முடிவும், அப்பர், சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய மூவர் பாடிய தேவாரமும், மாணிக்க வாசகர் பாடிய திருவாசகமும், திருக்கோவையும், திருமூலர் பாடிய திருமந்திரம் ஆகிய நூல்கள் சொல்லும் பொருள்கள் அனைத்தும் ஒன்று தான் என்று நீ உணர்ந்து கொள்.

Koviloor Digital Library

சாபம் நீங்கி ஞானம் பெற்ற சத்தியதவன்

தேனம்மை இலக்குமணன்,
காரைக்குடி

முன்னோர் செய்த புண்ணியம் தலைமுறை தலைமுறையாகத் தொடரும். அதேபோல்தான் அவர்கள் செய்த பாவமும் தொடரும். நா காவாமல் தன் தந்தை செய்த பிழையால் சாபத்தோடு பிறந்து அம்பிகையின் பீஜாக்ஷரத்தால் (சக்தி வாய்ந்த ஒரெழுத்து மந்திரம்) ஞானம் பெற்ற சத்தியதவனைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

வேத காலத்தில் கோசல தேசத்தில் தேவதத்தன் தன் மனைவி ரோகிணியுடன் வசித்து வந்தான். பல்லாண்டுகாலம் பிள்ளைப்பேறு இல்லாததால் இருவரும் மனம் வருந்தினார்கள். புத்திரகாமேஷ்டி யாகம் செய்தால் பிள்ளைப் பேறு உண்டாகும் என்று சொல்லப்பட அதற்கான முயற்சிகளில் இறங்கினான் தேவதத்தன்.

தமஸா என்ற நதிக்கரையில் புத்திரகாமேஷ்டி யாகம் செய்ய வேண்டிப் பொருட்களைச் சேகரித்தான். ஓம குண்டங்களையும் அமைத்தான். நெருப்பு, மின்னல், சூரியன் என்று மூன்று விதமான நெருப்புகளை எழுப்பினான். ரித்விக்குகளாகப் பிரம்மா, அத்வர்யு, ஹோதாவாகத் தக்கவர்களை அமைத்தான். இதில் பிரம்மா அதர்வ வேதத்தைப் பின்பற்றி யாகத்தைச் செய்வார். அத்வர்யு யாகத்திற்கான பொருட்களைக் கொடுத்து யாகக் குண்டத்தை அமைப்பார். ஹோதா ரிக் வேதம் ஓதி யாக தேவதைகளை அழைத்து அவர்களுக்கான மந்திரங்களை உச்சரிப்பார்.

உத்காதரர் சாம வேதம் ஓதுவதில் சிறந்தவர். தன்னுடைய புத்திர காமேஷ்டி யாகத்தில் சாம வேதம் ஓதும்படி உத்காதரராகக் கோபிலர் என்னும் மகரிஷியை வேண்டிக் கொண்டான் தேவதத்தன். வயது முதிர்ந்தவர் கோபிலர். அவரால் மூச்சை இழுத்துப் பிடித்துச் சாமகானம் செய்ய இயலவில்லை. கானம் அபஸ்வரமாக ஒலித்தது.

Koviloor Digital Library

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த தேவதத்தன் கணத்தில் மகரிஷியைப் பார்த்துச் சீறினான். "எப்படிப் பாட வேண்டும் சாமகானம். இப்படி அறி விலியைப் போல அபஸ்வரமாகச் சாமகானம் செய்கின்றீர்களே" என்றான். இந்த இகழ்ச்சியைக் கேட்டதும் ஏற்கனவே முதுமையினால் ஏற்பட்ட தள்ளாமையினால் தடுமாறிக் கொண்டிருந்த கோபிலர் மகரிஷி கோபம் கொண்டார். அவனுக்குச் சாபம் தந்தார்.

"உனக்கு மகன் பிறக்க வேண்டி என் தள்ளாமையையும் பொருட்படுத்தாமல் சாமகானம் பாட ஒப்புக் கொண்டேன். நீயோ என் வயதின் முதிர்ச்சியையும் கருதாமல் என்னை அறிவிலியென இகழ்ந்து விட்டாய். உனக்கு அறி விலியான புதல்வன் பிறப்பானாக" என்று சாபமிட்டு விட்டார்.

இதைக் கேட்டதும் நடுநடுங்கிப் போனான் தேவதத்தன். "சுவாமி. தாங்கள் இப்படிச் சாபம் கொடுக்கலாமா? குழந்தை வரம் வேண்டித்தானே யாகமே செய்கின்றேன். அப்படியிருக்க என் குழந்தைக்கு நீங்கள் இப்படி எப்படிக் கூறலாம்?" என்று கண்ணீர் விட்டுக் கதறி அழுதான்.

இதைக் கண்டு மனம் இரங்கினார் மகரிஷி. அவரது சினம் தணிந்தது. "உன் மகன் சில ஆண்டுகளுக்குப் பின் மேதை ஆவான்" என அருளிச் சென்றார். யாகமும் முடிந்தது.

சில காலம் கழித்துத் தேவதத்தனின் மனைவி ரோகிணி கருவுற்றாள். தக்கக் காலத்தில் அவளுக்கு அழகானதொரு ஆண் குழந்தையும் பிறந்தது. ஆனால் அந்தோ பாவம். வளர வளரக் குழந்தையின் மூடத்தனம் வெளிப்படலாயிற்று. தங்கள் மகன் பரம முட்டாளாக இருப்பதைப் பார்த்த தேவதத்தனுக்கு உள்ளம் விட்டுப் போயிற்று. இன்னும் வளர்ந்தபின் பலரும் அவனை மூடன் என்று இகழ்வதைக் காண்பதைக் காட்டிலும் அவனைக் காட்டில் கொண்டுபோய் விட்டுவிடலாம் என முடிவெடுத்தான்.

ஒருநாள் மனைவிக்கும் தெரியாமல் குழந்தையைக் கொண்டுபோய்க் காட்டில் விட்டு விட்டான். காட்டில் தனித்துவிடப்பட்ட அக்குழந்தைக்குத் தன் பெற்றோர் தனக்கு ஒன்றும் தெரியாத காரணத்தினாலேதான் தன்னைக் கைவிட்டு விட்டார்கள் எனத் துக்கமாக இருந்தது. "இனி நான் பொய்யே உரைக்கமாட்டேன்" என்று விரதம் பூண்டான். உண்பது, உறங்குவது இவை இரண்டைத் தவிர வேறு எதையும் அவன் செய்யாத காரணத்தினால் அவனுக்குச் சத்தியதவன் என்ற பெயர் விளங்கலா யிற்று.

இப்படியே பதினான்கு ஆண்டுகள் கழிய ஒரு நவராத்திரி காலம் வந்தது. காட்டில் ஒரு வேடன் ஒரு பன்றியை வேட்டையாடினான். ஆனால் அதுவோ சிற்சில காயங்களுடன் தப்பி ஓடிவந்து சத்தியதவனின் குடிலில் தஞ்சம் அடைந்தது. பன்றியைத் துரத்தியபடி வந்த வேடன் குடிலின் வாயிலில் அமர்ந்திருந்த

ஒலி அவனது காதில் பட்டதும் அவனுக்கு ஒருவிதமான ஞானத் தெளிவு ஏற்பட்டது. எனவே அவன் அந்த வேடனை நோக்கி ,” எவன் பார்க்கிறானோ அவன் சொல்லமாட்டான், எவன்

சத்தியதவனிடன் “இங்கே ஒரு அடிபட்ட பன்றி ஓடிவந்ததா? என வினவினான். மேலும் “அதைக் கொன்று சாப்பிடுவது என் குல தர்மம் நான் பொய் சொல்லவில்லை, நீயும் பொய் சொல்லக் கூடாது” என்று கூறினான்.

இதைக் கேட்ட சத்தியதவனோ இங்கே பன்றி இருக்கிறது என்று கூறினால் அது வதமாகி விடும். இல்லை என்றால் பொய் கூறியதாகி விடும். இவனும் பட்டினியாகப் போக நேரிடும் பாவமும் ஏற்படும். என்ன சொல்லலாமென யோசித்தான். குடிலின் உள்ளே மறைந்திருந்த பன்றியோ “ஹ்ரூம், ஹ்ரூம்” என உறுமுவது அவனுக்கு மட்டும் கேட்டது. இந்த ஓசை என்னை என்னவோ செய்கிறதே என்று உணர்ச்சி வசப்பட்டான் சத்தியதவன்.

அது நவராத்திரிக் காலம் வேறு. அம்பாளின் பீஜாக்ஷர மந்திரத்தின் ஒரு பகுதியான ’’ஹ்ரூம் ஹ்ரூம்’’ என்ற

சொல்கிறானோ அவன் பார்க்கமாட்டான். தன் வேலையையே கடமையாகக் கொண்ட வேடனே நீ அடிக்கடி என்ன கேட்கிறாய்?” என்று சமயோசிதமான வினவ, இவனிடம் பேசி மீள முடியாது என்பதை உணர்ந்த வேடன் அவ்விடத்தை விட்டு அகன்றான். பன்றியும் காப்பாற்றப்பட்டது.

இவ்வாறு பீஜாக்ஷர மகிமையால் ஞானம் பெற்ற சத்தியதவன் தன் அறியாமை நீங்கி மேன்மேலும் புலமை பெற்றவனானான். இதைக் கேள்வியுற்ற அவனுடைய பெற்றோர் இருவரும் வந்து அவனை மகிழ்வுடன் தழுவித் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர். இவ்வாறு தன் தந்தை செய்த பிழையால் பெற்ற சாபம் நீங்கி அம்பாளின் மந்திர மகிமையால் ஞானம் பெற்றான் சத்தியதவன்.

Koviloor Digital Library

சிவாலயங்களின் சிறப்புகள் - 16

வே.இராமசாமி, B.Com.F.C.A.,
Chartered Accountant
பலவான்குடி

சிவனேச செல்வர்களுக்குப் பணிவான வணக்கங்கள்.

சிவாலயங்களின் சிறப்புகளை மாதம் ஒரு திருக்கோயில் என எழுத இருக்கிறேன். இந்தத் தகவல்கள் கோயிலின் ஆலய குறிப்புகளில் இருந்தும் கோயில் குருக்கள் சொல்வதை வைத்தும் எழுதி எழுதியுள்ளேன்.

காங்கேயம் பாளையம் நட்டாற்றீஸ்வரர் கோவில்

ஈரோட்டில் இருந்து கொடுமுடி வழியாக கரூர் செல்லும் வழியில் காங்கேயம் பாளையம் என்ற திருத்தலம் அமைந்துள்ளது.

திருக்கோயிலின் இருபுறமும் காவிரி ஆறு ஓடுகிறது. கோயிலுக்கு செல்பவர்கள் பரிசல் மூலமாகத்தான் செல்ல வேண்டும். இப்பொழுது திருக்கோவிலுக்கு செல்ல பாலம் அமைத்து உள்ளார்கள். கொங்கு நாட்டில் உள்ள பஞ்சபூத தலங்களில் இந்த தலம் மண் (ப்ருத்வி) தலமாக கருதப்படுகிறது .

அகத்திய மாமுனிவர் மணலால் சிவலிங்கம் செய்து சிவ பூஜை செய்த இடம்.

மூலவரது பெயர் நட்டாற்றீஸ்வரர் . ஆற்றின் நடுவே இருப்பதால் இவருக்கு நட்டாற்றீஸ்வரர் என பெயர் ஏற்பட்டது .இவர் அகஸ்தீஸ்வரர் என்ற திருநாமத்துடனும் அருள் தருகிறார். அகத்திய மாமுனிவர் வழிபட்டதால் மூலவருக்கு அகஸ்தீஸ்வரர் என்ற பெயர் ஏற்பட்டது.

ராமேஸ்வரத்திற்கு இணையான திருத்தலம் என பக்தர்கள் கருதுகிறார்கள். ராமேஸ்வரத்திலும் சிவபெருமான் கடல் சூழ தீவில் அருள் தருகிறார் இங்கு நதி சூழ தீவில் அருள் தருகிறார்.

ராமேஸ்வரத்தில் சீதை மணலால்

Koviloor Digital Library

அமைந்துள்ளது. கோயில் இரண்டு நிலைகளில் உள்ளது. நல்ல நாயகி அம்பாள் என்ற திருப்பெயருடன் பார்வதி தேவி கீழ்த்தளத்தில் அருள் தருகிறார். அம்பாளின் மற்றொரு பெயர் அன்னபூரணி . கீழ் தளத்தில் இருக்கும் பிள்ளையாரைத்

லிங்கம் அமைத்தார் இங்கு அகஸ்தியர் மணலால் லிங்கம் அமைத்தார்

இந்த திருத்தலம் முருகனின் பெயரால் காங்கேயம் பாளையம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு முருகன் கைகளில் கிளியை ஏந்தியபடி அருள் தருகிறார் முருகப்பெருமான், தெற்கு நோக்கிய பிரமச்சாரியாக பக்தர்களை நோக்கி அடியெடுத்து வைக்கும் அருட்கோலத்தில்(முருகப்பெருமான் வலது காலை முன் வைத்து இடது காலை பின் வைத்து நடந்து வருவது போல் காட்சி தருகிறார் இந்தக் கோலத்தை வேறெங்கும் காண்பதற்கரிய தரிசனம் என்கிறார்கள்.

இந்தத் திருக்கோயில் ஓம் என்று பிரணவ வடிவத்தின் அமைப்பில்

தரிசித்துவிட்டு அப்படியே சிவசன்னதிக்கு வலமாக வந்தால், அந்த பாதை அமைப்பு 'ஓ' எனும் வடிவிலும், பிறகு கீழ் தளத்தில் இருக்கும் அம்பாளைத் தரி சித்துவிட்டு முருகன் சன்னதியை அடைகிறோம் எனில், அந்தப் பாதை அமைப்பானது 'ம்' வடிவிலும் அமையும் . விநாயகர் தரிசனம் செய்துவிட்டு நால்வர் நடன கணபதி சுப்பிரமணியர் அர்த்தநாரீஸ்வரர் பெருமாள் துர்க்கை பிரம்மா பைரவர் சண்டிகேஸ்வரர் நவக்கிரகங்கள் சனீஸ்வரன் சந்திரன், அகஸ்தியர் சூரியன் இவர்களை தரிசனம் செய்து விட்டு சுவாமியே தரிசனம் செய்து அம்பாளை தரிசனம் செய்தால் ஓ வடிவத்திலும் அம்பாளை தரிசித்து விட்டு ஈஸ்வரன் தரிசனம்

Koviloor Digital Library

செய்து முருகனை கும்பிட்டால் ம் வடிவத்திலும் அமைந்திருக்கும்

கார்த்திகை மாதம் கடைசி திங்கள் அன்று நடராஜப் பெருமாள் பரிசலில் ஏறி காவிரி நதியில் கோ யிலைச் சுற்றி வருவார்.

கோவிலின் தல வருசம் ஆத்திமரம். இது இங்கு உள்ள ஒரு பாறையின் மேல் வளர்கிறது இந்த மரத்திற்கு புதிய கிளைகள் உருவாவதில்லை

நட்டாற்றீஸ்வரர் திருக்கோயிலைச் சுற்றிலும் நான்கு உப கோயில்கள் அமைந்துள்ளன. அவை:

1 சாத்தம்பூர் வள்ளாலீஸ்வரர் கோயில்,

2. காலமங்கலம் மத்யபுரீஸ்வரர் கோயில்,

3.முலசியில் உள்ள முக்கண்ணீஸ்வரர் கோயில்,

4.கொக்கராயன் பேட்டை (ஏமப்பள்ளி) பிரம்மபுரீஸ்வரர் கோயில். இதில் பிரம்மபுரீஸ்வரரை குக்குட நாதேஸ்வரர் எனவும் அழைக்கிறார்கள். நட்டாற்றீஸ்வரரைத் தரிசிக்கவரும் அன்பர்கள் இந்தக் கோயில்களையும் தரிசித்து வரம்பெற்று வரலாம்.

கோயில் திறந்திருக்கும் நேரம் காலை 7 மணி முதல் மதியம் 12 வரை பிறகு மாலை 4 மணி முதல் 6 மணி வரை

தலச் சிறப்புகள்

1. காவிரி ஆற்றின் நடுவில் சிறிய குன்றின் மேல் ஓம்கார வடிவில் அமைந்த கோவில்

2. ஆருத்ரா தரிசனத்தை அன்று நடராஜப் பெருமாள் பக்தர்களுக்கு காட்சி தருவதற்காக காவிரி ஆற்றில் பரிசலில் உலா வருவார் மற்றொரு பரிசலில் நாதஸ்வரம் குழுவினர் வருவார்கள்

Koviloor Digital Library

3. சித்திரை மாதம் முதல் நாள் சிறப்பு வழிபாடு நடைபெறும்

4. ஆடிப்பெருக்கு அன்றும் கார்த்திகை மாதம் கடைசி திங்கட்கிழமை என்றும் சிவபெருமானுக்கு 108 சங்காபிஷேகம் நடைபெறும்

5. ஆடிப் பூரத்தன்று நல்ல நாயகி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் நடைபெறும்

6. சித்திரை முதல் நாள் அன்று மூலவர் அகத்தீஸ்வரருக்கு தயிர் கலந்த கம்பங்கூழ் நைவேத்யமாகப் படைக்கப்படுகிறது

7.முருகன் இடது கையில் கிளியை ஏந்தியடி காட்சி தருகிறார்.

8. விஜயதசமி அன்று குழுவில் வீற்றிருந்த அம்பாளை கோவிலைச் சுற்றி பரிசலில் எழுந்தருள செய்வார்கள்

9. தல விருட்சம் ஆத்தி மரம் பாறையின் மேல் அமைந்துள்ளது. இதற்கு கிளைகள் உருவாகவில்லை . ஆத்தி மரத்தடியில் ஆத்தி விநாயகர் அருள் தருகிறார்

10. அகஸ்தியர்க்கு பிரம்மஹஷ்டி தோஷம் தீர்க்கப்பட்ட தலம்

11. 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்தலம்

12. சுவாமிக்கு அபிஷேகம் அலங்காரம் எல்லாம் உச்சி காலத்தின் பொழுது மட்டும் தான்

13. காவிரி உற்பத்தியாகும் குடகுமலையில் இருந்து காவிரி கடலில் கலக்கும் இடம் வரை உள்ள நீளத்தில் நடுப்பகுதியில் திருக்கோயில் அமைந்துள்ளது.

14. ஆண்டுக்கு மூன்று முறை சாமிக்கு அன்னா அபிஷேகம் நடைபெறும் 1. சனி பிரதோஷம் 2. சித்ரா பௌர்ணமி 3. ஐப்பசி பௌர்ணமி

15. அம்பாள் மணப்பெண் ரூபத்தில் சுவாமிக்கு வலது பக்கம் காட்சி தருகிறார். பொதுவாக அனைத்து சிவாலயங்களிலும் சுவாமிக்கு இடது பக்கம் தான் அம்பாள் சன்னதி இருக்கும் ஆனால் இந்த திருத்தலத்தில் வலது பக்கம் அம்பாள் சன்னதி இருக்கிறது

16. பெருமாளின் பெயர் ஆத்தி பெரிய பெருமாள், விநாயகர் பெயர் ஆத்தி விநாயகர் தல விருட்சம் ஆத்தி மரம்

Koviloor Digital Library

திவ்ய தேச கவிதை தரிசனம் –33

திருவைகுந்த விண்ணகரம்

அழ. மணிமேகலை,
காரைக்குடி

108 திவ்ய தேசங்களுள் முப்பத்திமூன்றாவது திவ்ய தேசம் திருவைகுந்த விண்ணகரம். சோழநாட்டுத் திருப்பதிகளுள், இது முப்பத்திமூன்றாவது திவ்யதேசமாகும். இதுவும் ஒரு திருநாங்கூர் திவ்யதேசமாகும்.

திருநாங்கூரிலும் திருநாங்கூரைச் சுற்றிலும் அமைந்துள்ள 11 திருநாங்கூர் திருப்பதிகளுள் திருக்காவளம்பாடி, திருஅரிமேயவிண்ணகரம், திருவண்புருடோத்தமம், திருச்செம்பொன்செய் கோயில் மற்றும் திருமணி மாடக்கோவில் என்ற ஐந்து தலங்கள் குறித்து முன்பதிவில் கண்டுள்ளோம். இத்தலம் திருநாங்கூரில் நாம் காணப்போகும் ஆறாவது தலமாகும்.

கோவில் அழகே அழகு. சுற்றுச்சுவர்

Koviloor Digital Library

அரசர் ஸ்வேதகேது, நீதி தவறாமல் நாட்டை ஆண்டு வந்தார். அவருக்கும் அவருடையமனைவி தமயந்திக்கும் ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கும் பெருமாளைத் தரிசிக்க வேண்டுமென்று பேராவல். காட்டுக்குள் போய் தவம் செய்கின்றனர். சுற்றிலும் தீ மூட்டி நடுவில் நின்று, கடுமையான தவம். பூத உடல் மறைந்தது. வைகுந்தம் போய்ச் சேர்ந்தனர். அங்கே பெருமாளைக் காணவில்லை. நாரதர் இருந்தார். அவரிடம் விவரம் கேட்டதற்கு, அத்தம்பதியர் தானதர்மங்கள் செய்யாததால், தரிசனம் கிடைக்கவில்லை. பிராயச்சித்தமாக, திரும்பிச் சென்று காவிரிக்கரையில் ஐராவதீஸ்வரரை வணங்கித் தியானம் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார்.

எழுப்பிய முகப்பு வாசல், முகப்பு வாசலைக் கடந்தால் நேரே கோவில். நடுவில் பலிபீடம், கொடிமரம், பெரிய திருவடிக்கான குட்டி சந்நிதி என எதுவும் இல்லை. கோவில் கட்டடத்தின் சுவரில் சின்ன மாடத்தில் பெரிய திருவடியான கருடர். கோவிலுக்குள் நுழைந்ததும் கருவறையில் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி ஆகிய மூன்று தேவிகளுடன் பெருமாள் ஸ்ரீவைகுண்டத்தில் எப்படி அமர்ந்திருப்பாரோ, அதே திருக்கோலத்தில் அழகான காட்சி.

ஏற்கனவே கூறிய திருநாங்கூர் வரலாறு தவிர, இத்தலம் உருவானதற்கு மற்றொரு கதையும் உண்டு. இஷ்வாகு குலத்தில் வந்த

அதே போல், தியானம் செய்யும்போது, உதங்க முனிவரும் வந்து தியானத்தில் கலந்து கொண்டார். ஐராவதேஸ்வரரும்,

Koviloor Digital Library

பெருமாளைத் தியானம் செய்ய விரும்பி, அவர்களுடன் தியானத்தில் அமர்ந்துவிட்டார். இவர்களுக்குக் காட்சி கொடுப்பதற்காக, மஹாவிஷ்ணு வைகுண்டத்தில் இருக்கும் அதே கோலத்தில் இவர்களுக்குக் காட்சி கொடுத்து ஆசிகள் வழங்குகிறார். அப்பொழுது, ஐராவதேஸ்வரர் வேண்டிக் கொண்டதற்கிணங்க, பெருமாள், அதே கோலத்தில் இத்தலத்தில் இருந்து அனைவருக்கும் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறாராம்.

இங்குள்ள,

மூலவர் – வைகுந்தநாதன்

உற்சவர் – தாமரைக்கண்ணுடைய பிரான்

தாயார் – வைகுந்தவல்லி

தீர்த்தம் – லட்சுமிபுஷ்கரணி, உத்தங்கபுஷ்கரணி, விரஜா

விமானம் – அனந்த ஸத்ய வர்த்தக விமானம்

கோலம் – கிழக்கு நோக்கி அமர்ந்த கோலம்

வைகுந்தத்தில் தேவர்களுக்கு திருமால் காட்சியளிப்பது போல், இத்தலத்திலும் பக்தர்களுக்கு அருள்புரிவதால், இத்தலம் பரமபதத்துக்கு சமமான தலமாகக் கருதப்படுகிறது. மூலவர் வைகுந்தநாதன், தாமரை பீடத்தின் மீது வலது காலை மடக்கி, குத்திட்டு வைத்து, இடது காலைத் தொங்கவிட்டு, இடது கரத்தை அரவத்தின் மீது வைத்து, பின்னிரு கரங்களில் சங்கு சக்கரம் ஏந்தி, பின்புறம் ஐந்து தலை ஆதிசேஷன் மீது அமர்ந்த கோலத்தில், உபயநாச்சியார்களுடன் கிழக்கு நோக்கி அருள்பாலிக்கிறார்.

என் அய்யா, காப்பியக்கவிஞர், நற்றமிழ்நாவலர் கவிஞர்கோ நா.மீனவனார் “திருவைகுந்த விண்ணகரம்“ குறித்து எழுதிய ஐந்து பாடல்களும் அவற்றின் விளக்கங்களும் பின்வருமாறு.

1. பரமபதமான வைகுண்டத்தில் இருந்து அருள்புரியும் அழகு நிறைந்த வைகுந்தநாதன், மேகம் போன்ற நிறம் பெற்றவனாய், வைகுந்த வல்லியுடன், இத்திருத்தலமான, வைகுந்த விண்ணகரத்தை வந்தடைந்து, பரகாலன் என்று அழைக்கப்படும் திருமங்கையாழ்வாரின்

Koviloor Digital Library

பாடல்களில் இன்புற்றுக் கொண்டிருக்கின்றான். அவனுடைய பாதங்களைப் போற்றுவாமாக.

வண்ணமார் பரமபத வைகுந்த நாதன்கார்
வண்ணனாய் வைகுந்த வல்லியுடன் வைகுந்த
விண்ணகரம் மேவிப் பரகாலன் போற்றிசெய்த
பண்ணிலே இன்புறுவான் பாதங்கள் போற்றுமினே.

2. நம் பெருமான் ஒரு கையில் சங்கையும், மறுகையில் பகையை வெல்லக்கூடிய சக்கரத்தையும் தாங்கி ஒளிகாட்டிக் கொண்டிருக்கிறான். மகாபாரதத்தில் நடந்த ஒரு நிகழ்வு. சேதி நாட்டு மன்னனுக்கு மகனாகப் பிறந்தவன் சிசுபாலன். பிறக்கும் போதே நான்கு கரங்களுடனும் மூன்று கண்களுடனும் பிறந்தான். அப்போது ஓர் அசரீரி, “யார் மடியில் வைக்கும் பொழுது அக்குழந்தையின் வேண்டாத உறுப்புகள் மறைகிறதோ, அவராலேயே இப்பிறவியின் மரணமும் சம்பவிக்கும்” என்று கூறியது. கண்ணனின் அத்தை மகன்தான் இந்த சிசுபாலன். கண்ணனின் மடியில் குழந்தையைக் கிடத்தியதும் வேண்டாத உறுப்புகள் மறைந்தன. சிசுபாலன் செய்யும் நூற்றியெட்டுக் குற்றங்களை மன்னிப்பதாகவும், அதுவரை அவனைக் கொல்லாதிருப்பதாகவும், கண்ணன் சிசுபாலனின் தாயாருக்கு உறுதி கொடுத்தார்.

சிசுபாலன் விரும்பிய ருக்மணி தேவி, கண்ணனை விரும்பித் திருமணம் செய்து கொண்டது, அவன் பகையை மேலும் தீவிரமாக்கியது. பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்தில் ராஜசூய யாகம் நடத்தினர். அப்பொழுது அவர்கள் கிருஷ்ணருக்கு முதல் மரியாதை செய்ய எண்ணினர். அதை ஏளனம் செய்த சிசுபாலன், சபையினர் முன்பு கிருஷ்ணரை அவமதிக்கும்

Koviloor Digital Library

ராஜ சூயமான பூமியில் விழ, அந்த புண்ணிய பலனால், அவன் ஆன்மா மோட்சம் அடைந்தது, தீமைக்கும் நன்மை செய்யவே, யாக பூமியை யுத்த பூமியாக்கி, சிசுபாலனை மோட்சம் அடையச் செய்தான் கண்ணன். இவ்வாறு சிசுபாலனை அழித்த கண்ணன், பாண்டவர்களுக்கு அருள் செய்த நம் பரந்தாமன், அர்ஜுனனின் மைத்துனன் ஆவான். அவன் இந்த தலமான விண்ணகரத்தில் வீற்றிருக்கின்றான். அவனை வாழ்த்துவோமாக.

சங்குடனே பகைவெல்லும் சக்கரமும் இருகரத்தில்
தங்கியே ஒளிகாட்டத் தனைஎதிர்த்த சிசுபாலன்
அங்கமது பிளந்தான்நம் அருச்சுனனின் மைத்துனனார்
இங்கிந்த விண்ணகரம் இருக்கின்றான் வாழ்த்துமினே.

விதமாக நடந்து கொண்டான். அவன் திட்டிய வார்த்தைகளை, தன்னை பூஜித்த மந்திரமாக, நூற்றியெட்டு அர்ச்சனைகளாக ஏற்றுக்கொண்டு, அந்தப் புண்ணியமும் சிசுபாலனைச் சேர வழி செய்தான் கண்ணன். "இனிக் காலம் கடந்தால் அவன் பாவம் செய்து விடுவான், மோட்சம் செல்லும் தகுதி பெறப் புனிதமான இடத்தில், புனிதமான ஆயுதத்தால் மடிய வேண்டும்" எனக் கண்ணன் எண்ணினான். மஹா சுதர்சனம் அவனது சிரத்தை அறுக்க, அவன் உடல்

3. வண்டுகள் ஒலி எழுப்பிக் கொண்டிருக்கும் பூக்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருத்தலம் வைகுந்த விண்ணகரம். இத்தலத்தில் எழுந்தருளி உலகிலுள்ளோரைக் காக்கும் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றான்

Koviloor Digital Library

எம்பெருமான். முன்பு வாமனனாகி உலகை அளந்தவன் மேல் பக்தி கொண்டு உருகி நின்றோமானால், நாம் கொண்ட வினைகளை அறுத்து நம் குலத்தைக் காத்திடுவான். ஆதலால் அவனை வணங்குவோமாக.

வண்டொலி செய் பூம்பொழில்சூழ் வைகுந்த விண்ணகரம்
கண்டருளி உலகவரைக் காக்குமொரு தொழில்பூண்டான்
பண்டிந்த உலகளந்தான் பத்திமைக்கே உருகிநாம்
கொண்டவினை தனைஅறுத்துக் குலம்காப்பான் வணங்குமினே.

4. யமுனை நதியில் வசித்து வந்த ஐந்து தலை நாகமான காளிங்கனை அடக்கி ஆட்டிய எம்பெருமான், மேகங்கள் சூழ்ந்து இருக்கின்ற கோபுரங்களையும், நிலைபெற்று இருக்கக்கூடிய திருமதில்களையும், கொஞ் சுகின்ற கிளிகளும் பாடுகின்ற குயில்களும் இருக்கின்ற குளிர்தரும் சோலைகளையும் கொண்டுள்ள இத்திருத்தலத்தில் குழல் ஊதிக்கொண்டு, நம்மை மகிழ்வூட்டுவதற்காக இங்கு அமர்ந்து கொண்டு நமக்கு அருள் செய்து கொண்டிருக்கிறான். அவனை வணங்குவோமாக.

மஞ்சிவரும் கோபுரங்கள் மன்னிநிலை திருமதில்கள்
கொஞ்சுகிற கிளிமிழற்றக் குயில்பாடும் குளிர்சோலை
நெஞ்சிலே மகிழ்வூட்ட நின்றுகுழல் ஊதுபிரான்
நஞ்சரவம் ஆட்டியவன் நமக்கருள்வான் வணங்குமினே.

5. எல்லோரும் விரும்பும் நல் அழகை உடையவன். ஆயர்பாடியில் கன்றுகளை மேய்த்துத் திரிந்தவன். வாமன அவதாரத்தில், மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டு, குள்ளமான வாமன உருவத்தை மிகப்பெரிய உருவமாக மாற்றி, முதல் அடியை பூமியிலும், இரண்டாம் அடியை வானத்திலும், மூன்றாம் அடியை மகாபலி தலையிலும் வைத்து, மகாபலியைப் பாதாள உலகத்தில் அரசாட்சி செய்யப் பணிந்தவன். தன்னை யாரென மகாபலி அறிய வைத்திட்ட சிறப்புடைய மூர்த்தி. எல்லோருக்கும் முதலானவனாக

Koviloor Digital Library

இருக்கும் கண்ணனுடைய நலம் தரும் சேவடிகளைப் போற்றுவோமாக.

காமுறுநல் அழகுடையான் கன்றுகளை மேய்த்தபிரான்
வாமனனாய் மாவலியின் வலியடக்கி உருவளர்ந்து
தாமறிய வைத்திட்ட தனிமூர்த்தி முழுமுதலோன்
சேமத்தைத் தருங்கண்ணன் சேவடிகள் போற்றுமினே.

மங்களாசாசனப் பாடல்

மின்னலைப் போன்று நுட்பமான இடையை உடைய ஜானகிக்காக, இராவணனது பத்துத் தலைகளும் இருபது தோள்களும் விழும்படி, தனது ஒப்பற்ற கோதண்டத்தை வளைத்து, பானம் எய்து, இலங்கையைப் பொடியாக்கிய வலிமையான தோளினான எம்பிரான் இனிது மகிழ்ந்து கோயில் கொண்டிருக்குமிடத்தில் சம்பாப் பயிரும், செந்தாமரைகளும், சேல், கயல், வாளை போன்ற மீன்களும், செங்கழுநீர்ப் பூக்களும் நெருங்கி வயல்களில் நிறைந்திருக்கும் நிலையான கீர்த்தியை உடைய வேதியர்கள் மிகுதியாக வசிக்கின்ற பெருமையுடைய ஊர் திருநாங்கூர் திருவைகுந்த விண்ணகரமாகும். இதை மடநெஞ்சே, சேவிப்பாயாக! என்று பெருமானைச் சேவிக்கச் சொல்லும் திருமங்கையாழ்வாரின் பத்துப் பாசுரங்களில் ஒன்று பின்வருமாறு.

மின்னனைய நுண்மருங்குல் மெல்லியற்கா இலங்கை
வேந்தன் முடியொருபதும் தோளிருபதும் போயுதிர
தன்னிகரில் சிலைவளைத்து அன்றுஇலங்கை பொடிசெய்த
தடந்தோளன் மகிழ்ந்துஇனிது மருவியுறை கோயில்
செந்நெலொடு செங்கமலம் சேல்கயல்கள் வாளை
செங்கழுநீரொ[illegible]டு மிடைந்து கழனிதிகழ்ந்து எங்கும்
மன்னுபுகழ் வேதியர்கள் மலிவெய்து நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே!

Koviloor Digital Library

பெரியபுராணக் கதைக் களம்

பகுதி – 16

அன்பர்களே!

தொண்டர்தம் பெருமை அளவிடற்கு அரியது. அவர்களின் அருள் வரலாறு நம்மை நல்வழியில் நடத்தும். திருநெல்லையின் இவ்விதழில் புதுமை இணைப்பாகப் பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள அறுபத்து மூன்று அருந்தொண்டர் கதைகள் ஒவ்வொன்றாகக் காதுகளுக்கும், கண்களுக்கும் மனதிற்கும் இன்பம் சேர்க்கும் வகையில் கதைவடிவில் ஒளிபரப்பாகிறது. கேட்டு, உணர்ந்து அனுபவித்து மகிழுங்கள்.

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

Koviloor Digital Library

தென் சபாநாயகர் கோயில் தரிசனம்

உ

1-7-2025 அன்று மாலை அருள்மிகு சிவகாமி அம்மன் உடனுறை அருள்மிகு ஆனந்த நடராச மூர்த்திக்கு ஆனித்திருமஞ்சன மகா அபிடேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது

ஆடி - ஆவணி மாத வழிபாட்டு நிகழ்ச்சிகள்

01.08.25	வளர்பிறை அஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு
04.08.25	வளர்பிறை ஏகாதசி	காலை	பெருமாள் வழிபாடு
06.08.25	பிரதோஷம்		
08.08.25	பௌர்ணமி	மாலை	சிவகாமி அம்மன் வழிபாடு
12.08.25	சங்கடஹர சதுர்த்தி	மாலை	விநாயகர் வழிபாடு
16.08.25	தேய்பிறை அஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு
16.08.25	கார்த்திகை	மாலை	ஸ்ரீ ஆறுமுகர் வழிபாடு
20.08.25	பிரதோஷம்		
27.08.25	விநாயகர் சதுர்த்தி	மாலை	விநாயகர் வழிபாடு

Koviloor Digital Library

ஒலிப்பேழை

கம்ப வாரிதியின் பக்கம்

திருநெல்லை இதழில் மாதந்தோறும் கம்பவாரிதி இலங்கை திரு ஜெயராஜ் அவர்களிடம் வினாக்களை எழுப்பி அவ்வினாக்களுக்கு விடையை அவர்களின் குரல் வழியாகப் பெற்று திருநெல்லையில் பதிவிடுகிறோம்.

கேள்வி:1

1.பக்தி மாநாடுகள் தெய்வபக்தியை வளர்கின்றனவா எனும் கேள்விக்கு பதிலளிக்குமாறு வேண்டுகிறோம்.

பதில்:1

கேள்வி:2

2.சித்தாந்தம், வேதாந்தம் இரண்டும் வேறு வேறா? அல்லது ஒன்றுபட்டனவா? என விளக்குமாறு வேண்டுகிறோம்

பதில்:2

Koviloor Digital Library

பயிற்சிப் பேழை

ஞானசம்பந்தர் தேவாரம்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

திருநாவுக்கரசர் தேவாரம்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

சுந்தரர் தேவாரம்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

திருப்புகழ்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

கோவிலூர் ஆண்டவர் நூலகம்

கோவிலூரில் அமைக்கப்பெற்றுள்ள ”கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில்” சுமார் 44,000 க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. நூல் விவர அட்டவணையைப் பதிவிறக்கம் செய்ய இங்கு சொடுக்கவும்.

கோவிலூர் ஆண்டவர் இணைய நூலகம்



கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள நூல்கள் அனைத்தையும் கோவிலூர் ஆண்டவர் நூலகம் என்ற இணையதள நூலகத்தில் பதிவேற்றம் செய்து தமிழ்க் கொடையாக அளிக்க முடிவு செய்துள்ளோம்.

Koviloor Digital Library

தற்போது சுமார் 7,408அரிய நூல்கள் இணைய நூலகத்தில் உள்ளன.

இப்போது நாள் ஒன்றுக்கு சுமார் 3000 பக்கங்களைப் புதிதாக இந்த நூலகத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்கலாம்/ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்க / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள (பட்டியலில் காட்டப்பெற்றுள்ள) எந்த நூலாவது உங்களுக்குத் தேவை என்றால் நூலகப் பொறுப்பாளர் திருமதி.சோமசுந்தரி அவர்களைத் (தொலைபேசி எண் 9488124941 என்பதில்) தொடர்பு கொள்ளவும். அந்த நூல் பதிப்புரிமைக்கு அப்பால் இருக்கும் நிலையில் அதை நம் இணைய நூலகத்தில் சேர்த்திட ஆவன செய்கிறோம். தாங்களும் அந்த நூலை உங்கள் வீட்டில் இருந்து இணையவழியாகப் படிக்கலாம். நூல் இணையத்தில் சேர்த்தபின் உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும். நீங்கள் அந்த நூலை இணைய நூலகத்தில் படித்துக் கொள்ளலாம் அல்லது பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதற்கு எந்தக் கட்டணமும் இல்லை

இணைய நூலகத்தைப் பயன்படுத்துவோம். இறை தத்துவங்களை அறிவோம்.

இப்போது போர்காலமாக இருப்பதால் அடிக்கடி நமது மின் நூலகம் இணைப்பு தடைப்பட்டு வருகிறது.

அவ்வாறு தடைப்பட்டு வரும் சூழலில் அதற்கு மாற்றாக தார் பிரவுசர் என்ற பிரவுசரை கொண்டு நமது நூலகத்தை நீங்கள் தொடர்பு கொள்ள முடியும். அதற்குரிய லிங்க் இத்துடன் இணைத்து இருக்கிறோம்

https://www.torproject.org/download/

Koviloor Digital Library

முந்தைய இதழ்களை படிக்க அந்தந்த லிங்கை கிளிக் செய்யவும்

திருநெல்லை – புரட்டாசி

திருநெல்லை – ஐப்பசி

திருநெல்லை – கார்த்திகை

திருநெல்லை – மார்கழி

திருநெல்லை – தை

திருநெல்லை – மாசி

திருநெல்லை – பங்குனி

திருநெல்லை – சித்திரை

திருநெல்லை – வைகாசி

திருநெல்லை – ஆனி

திருநெல்லை – ஆடி

திருநெல்லை – ஆவணி

திருநெல்லை – புரட்டாசி

திருநெல்லை – ஐப்பசி

திருநெல்லை– கார்த்திகை

திருநெல்லை– மார்கழி

திருநெல்லை– தை

திருநெல்லை– மாசி

திருநெல்லை– பங்குனி

திருநெல்லை– சித்திரை

திருநெல்லை– வைகாசி